1-4

# கலைச்செல்வி



விலை சதம் 35

# சரஸ்வதி

## கலை, இலக்கிய இதழ்.

### மாதம் இருமுறை

ஆசிரியர் குழு

**எஸ். ராமகிருஷ்ணன்**

**ரகுநாதன்**

**ஆர். கே. கண்ணன்**

**சுந்தர ராமசாமி**

**வ. விஜயபாஸ்கரன்**
(பொறுப்பாசிரியர்)

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன.

**தனிப்பிரதி: 25 ந. பை. ஆண்டுச்சந்தா ரூ. 6**

*சரஸ்வதி*

**19, லாங்ஸ் கார்டன் வீதி; சென்னை-2.**

# கலைச்செல்வி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்." —பாரதி


| | | |
|---|---|---|
| கலை 1 | ஐப்பசி 1958 | காட்சி 4 |



| | | |
|---|---|---|
| பயப்படாதீர்கள் | | 3 |
| உயர்திரு சுவாமி சித்பவானந்தா | | 5 |
| சிறையிருக்கேன் உன்னாலே! | அருள். செல்வநாயகம் | 9 |
| உறவு | மு தளையசிங்கம் | 13 |
| தகர விளக்கு | எஸ். எல், சௌந்தரநாயகம் | 19 |
| பாரதி வகுத்த பாதை | முருகையன் | 22 |
| அவர்க்கும் உண்டு இதயம் | எம். ரீ. எஸ். | 27 |
| வாழ்க காந்தி | திமிலை மகாலிங்கம் | 32 |
| உறுதி பிறந்தது | உமா | 33 |
| கண்டதும் கேட்டதும் | | 40 |
| பெரியோர் கேண்மை | சி. பொன்னம்பலம் | 42 |
| இதய வானிலே | உதயணன் | 50 |
| நாவலர் கட்டுரைப் போட்டி | | 55 |



விலை சதம் 35

# வாசகர் வாய்மொழி

**ராஜாதிராஜ வீரமார்த்தாண்ட.**

சாதிப் பாகுபாட்டை ஒழிக்கக்கூடிய ஒரே சக்தி தொழிலாளிதான் என்று 'இந்நாட்டு மன்ன'ரில் கூறும் ஜீவாவின் துணிச்சலை வரவேற்கின்றோம்.

அரியாலை பாலாஜீ.

நான் ஒரு சர்வகலாசாலை மாணவன், ஜீவாவின் கதையைப் படித்து விட்டு மூக்கைத் தடவிப் பார்த்தேன். ரத்தம் கசிந்தது.

கண்டி, வரதராசா.

சர்வகலாசாலை மாணவர்க்கென்று தனி வாடை, தனி ஆடை இருக்கின்றதா? 'இந்நாட்டு மன்ன'ரில் இக்கட்டம் பொருந்தவில்லை.

யாழ்ப்பாணம்; எம்.எச் ஹமீம்

**அழிவுக்கு அன்பில்லை**

காதலையும் ரத்தபாசம் வெல்லும் என்று சாதிக்கும் கதாசிரியரின் திறமையே திறமை.

உடுவில் அ. இராஜகுலதேவி

**குமுதச்செல்வி**

தாய்நாட்டில் ஒரு குமுதம், சேய் நாட்டில் ஓர் அமுதம்.

இரத்தினபுரி மு, பொன்னப்பலம்

**றெடிமேட்ஸ்பெஷல் எக்ஸ்பிரஸ்**

பழைய கலைஞர்கள் தயார் செய்த சொற் சேர்க்கைகளே 'ஓடி வா உயிர் காக்க' என்ற கதையில் காணப்படுகின்றன.

கல்வயல் இ. முருகையன்

சுவையாகவும் வேகமாகவும் ஓடுகிறது கதை.

நல்லூர் செ. சரஸ்வதி

**பாரதி மலர்**

பாரதி மலர் கண்டேன். இளங் கவிஞர்கள் பலரை ஊக்குவித்தல் கண்டு மகிழ்ச்சி.

கல்முனை நீலாவணன்.

**யாவும் கற்பனை(யல்ல)**

கற்பனையே யானாலும்...ஒவ்வொரு வார்த்தையும் உயிர் பெற்றுப் பேசுகிறது.

ஹட்டன் கே. சுந்தரவடிவு

**தேவை/ பாலர்கள்....**

.........இத்தனையையும் சிறப்பாகச் செய்யும் தாங்கள் ஏன் பாலருக்கென்று ஒரு தனிப்பகுதி ஒதுக்கக்கூடாது?

திருநெல்வேலி க. இராஜேஸ்வரி

**அ(ட்)டைமொழி!**

'கலைச் செல்வி'யில் வெளியாகும் விஷயங்கள் தரமா யிருக்கின்றன. ஆனால் அட்டைப்படங்கள்...

திருநெல்வேலி பரராஜசிங்கம்

**துர்அதிர்ஷ்டம்**

அறிவரங்கப் பரிசைப் பகிர்ந்து கொடுங்கள். அதிர்ஷ்டச் சீட்டின் பெயரால் வயிற்றிலடிக்காதீர்கள்.

மானிப்பாய் மு, நடேசன்

# கலைச்செல்வி வளர்ச்சி நிதி

தமிழபிமானிகளது ஆதரவை நம்பியே 'கலைச் செல்வி'யை வெளியிடத் தொடங்கினேம். நமது நம்பிக்கை வீண் போகவில்லை. நல்ல நோக்கத்துடன் செய்யும் பணியினை நாட்டு மக்கள் அனைவரும் ஆதரிப்பார்கள் என்பதற்கு நாள்தோறும் நமக்குக் கிடைத்துவரும் கடிதங்களே சான்று.

இரண்டு அன்பர்களது கடிதங்களை வெளியிட்டு "**கலைச்செல்வி வளர்ச்சி நிதி**" ஆரம்பிக்கின்ரேம். உங்களால் கொடுக்கக்கூடிய தொகையை ஒரே தடவையிலோ, அல்லது தொடர்ந்து ஒவ்வொரு மாதமுமோ கொடுத்துதவுங்கள், தாய்த் தமிழகம் ஒரு வாசனையும், ஒரு சதாசிவத்தையும், ஒரு அழகப்பரையுந்தான் கண்டிருக்கிறது. சேய்த் தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவருமே வாசன்களாகவும், சதாசிவங்களாகவும் அழகப்பர்களாகவும் மாறிவருகின்ருர்கள் என்ற செய்தியை, அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வரும் **நன்கொடையாளர் பட்டியல்** மூலம் எல்லா உலகமும் அறிந்து இன்புறட்டும்!

ஆ—ர்.

I

## வரதர் வெளியீடு

226, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

அன்புமிக்க ஆசிரியருக்கு,

'கலைச்செல்வி'யின் சென்ற மூன்று இதழ்களையும் மிகவும் அக்கறையோடு கவனித்து வந்தேன். என் மனதில் தோன்றிய மகிழ்ச்சியை வெளியிடாமலிருக்க முடியவில்லை. இருக்கிற சிறு குறைகளை நீக்கி. தரம் குறையாமல் இந்தப் பத்திரிகையை வளர்த்து வருவீர்களானுல் அது ஈழநாட்டுத் தமிழிலக்கியத்துக்கு நீங்கள் செய்த பெரிய தொண்டாகுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

தமிழ்நாட்டில் பெரிய முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகைகளைப் போல் 'கலைச்செல்வி' இல்லையென்பது தெரியும். அதனுல், இதன் விற்பனை விளம்பர வரவு ஆகியவற்றைக் கொண்டுமட்டும் காலூன்றிவிட முடியாது.

ஈழத்திலிருந்து ஒரு நல்ல பத்திரிகை வரவேண்டுமென்ற ஆவலுடைய என்போன்ற பல அன்பர்கள் நிச்சயமாக இருப்பார்கள். அவர்களுடைய உதவிகளையெல்லாம் பெற்றுக் 'கலைச்செல்வி' தன்னுடைய பலத்தைப் பெருக்

கிக்கொள்ளவேண்டும். மாதந்தோறும் அவர்கள் தந்துதவக்கூடிய ஒரு குறிப்பிட்ட தொகையைக் 'கலைச்செல்வி' உவந்தேற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் பணியை நானே ஆரம்பித்து வைப்பதில் பெருமைப்படுகிறேன். **ஒவ்வொரு மாதமும் 10 ரூபா கலைச்செல்விக்காக அனுப்பி வருவேன்.**

இலக்கிய அபிமானிகள் — நூற்றுக் கணக்கானவர்கள — 'கலைச்செல்வி'க்குக் கைகொடுக்க முன்வருவார்கள் என்றே நம்புகிறேன். அவர்கள் தரும் தொகை ஐம்பது சதமாகவும் இருக்கலாம்; ஐம்பது ரூபாவாகவும் இருக்கலாந்தானே!

அன்புள்ள

**25—9—1958** **தி. ச. வரதராசன்.**

## II

84/5, தபால்கந்தோர் ஒழுங்கை.
வண்ணார்பண்ணை.

அன்புடையீர்!

பணக்கஷ்டத்தின் காரணமாகவே இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள் பல மறைந்துவிட்டன. ஆகையினால் 'கலைச்செல்வி'யை வளர்க்க வாசகர்களாகிய நாம் முயற்சி செய்யவேண்டும். அதற்கு இனி ஒரு விதி செய்வோம். வாசகர்களாகிய எங்களில் சுமார் 200 பேர் மாதாமாதம் ரூபா ஒன்று வீதம் 'கலைச்செல்விக்குச் செலுத்தினால், அந்தத் தொகையைக் கொண்டு பத்திரிகையை நன்கு நடத்தலாம். இத்தொண்டைச் செய்வதற்கு விரைந்து வருமாறு எல்லோரையும் பணிவுடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு,

**கு. சுப்பிரமணியம்**

(பணம் அனுப்பவேண்டிய முகவரி: நிர்வாகி, 'கலைச் செல்வி', கந்தரோடை S. P. O. சுன்னாகம்,)



திருநெல்வேலி,
இ. வா. ச. மண்டபத்தில்
நடன விருந்தளித்த
செல்வி.
சாந்தா இளையதம்பி.

*இலங்கை இந்தியப் பத்திரிகைகள் பலவற்றில் ஆசிரியரின் எழுத்தோவியங்கள் வெளிவந்துள்ளன. விபுலானந்த அடிகளைப் பற்றி மூன்று நூல்கள் எழுதியிருக்கின்றார். 'கலைமகள்' ஆசிரியரின் மதிப்புரையுடன் கூடிய "தாம்பூலராணி" இவரது சிறுகதைத்தொகுதி.*

# சிறையிருக்கேன் உன்னாலே!

**அருள்செல்வநாயகம்**

இயற்கை எழில் பொங்கிவரும் பொன்னான ஊர் மருதூர். எங்கும் பசுமைதான். நூற்றுக்கணக்கான ஏக்கர் புன்செய் நிலங்களால்சூழப்பெற்ற மருதூரின் முடிசூடாமன்னன் அவன். ஏராளமான புன்செய் நிலங்களுக்குச் சொந்தக்காரன் .ஆகவே அவன் காலால் இட்டவேலையைத் தலையால் செய்ய எத்தனையோ பேர்கள் கைகட்டிக்காத்து நின்றார்கள்,

கட்டிளங்காளையான அவன். சொந்த மாமன் மகளை மனமாரக் காதலித்தான். அவளும் அவனை உள்ளத்தில் இருத்திவைத்து வழிபட்டாள். நாள் தவறினாலும் அவன் அவளைச் சந்திப்பதைத் தவறவிடமாட்டான், அவளைக் காணாமல் அவனால் இருக்கமுடியாது. அவளுக்கும் அப்படித்தான். அவர்களது அன்பு காதலாக வளர்ந்து கனிந்துருகியது. வாழ்க்கைப்பாதையிற்றான் பர்ணமிக்கவில்லை! அந்த நாளை எதிர்பார்த்து அவர்கள் இருந்தாலும் தனிமையில் கண்டு மனதைவிட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை இன்னும் ஏற்படவில்லை. கண்களால் கண்டு பழகினார்கள்; காதலைக்கொட்டினார்கள்; அவ்வளவுதான். அந்த இன்பநிலையும் ஒரு வாரமாக அவனுக்குக் கிடைக்கவில்லை. வயல்தகராறு காரணமாகப் பட்டணம் சென்றவன் அன்று தான் ஊருக்குத் திரும்பினான். அவன் திரும்பியவேளை நிலா வானத்திலே பவனி வந்து கொண்டிருந்தது.

நிலாவின் குளுமை அவனை இன்ப வேதனைக்குள்ளாக்கியது. அவளைத்தான் பார்க்கமுடியா விட்டாலும் அவளது வார்த்தைகளையாதல் கேட்கலாமே என்ற நினைவு உந்தவும், நண்பனது இல்லத்தினுக்கே விரைந்தான். அவனுடைய இல்லத்தையடுத்து அவளுடைய வீடு இருந்தது. அதன்பயனாகத்தான் அவர்களது காதலும் வளர்ந்தது. வளர்ந்து கொண்டிருந்தது.

நண்பனது இல்லத்திலே புகுந்த அவன், அவளது வார்த்தைகளைத் துணையாகக் கொண்டான். மருதூர் மக்களுக்குக் கவிதை இசைப்பது சாதாரணமான வழக்கம். ஆணும் பெண்ணும் போட்டியாகநின்று கவிதை இசைப்பார்கள். அவனும் அவளும் போட்டியாக இசைத்தாலும் எவருமே வித்தியாசங் கொள்ளமாட்டார்கள். கண்களால் காதலைவளர்த்த அவன் பலநாள் பிரிவாற்றுமல்கவிதைஇசைக்க முனைந்தான். நண்பனது இல்லத்திலே இருந்து கொண்டு அவன் பாடலானுன். எப்படிப்பாடுகிருன்? 'எனது தலைவியின் சுகமென்னவென்று சொல்லமாட்டீர்களா நங்கணங்களே', என்கிருன் அழகாக! பிரிவைப் பண்பாகக்காட்டி சுகம் விசாரிக்கும் வண்ணம் கவிதை இசைக்கிருன்

"உயரப்பறக்கும் ஒரு கோடி நங்கணங்காள்
தாழப்பறவீரோ என்ர தலைவி
சுகம் கேட்டறிய"

கவிதை அவளுக்கு இட்டேறுகிறது. ஆசை அத்தான் வந்து விட்டாரென்பதைக் கவிதை அவளுக்குத் தெளிவாக உணர்த்தியது. கன்னிச்சிறையாயிற்றே அவள். ஆகவே அன்புக் காதலுக்கும் விடை இறுக்க முனைகிருள். எப்படி? 'சதாதங்களது சாயலே என்கண்முன் தோன்றிக் கொண்டிருக்கிறது', என்கிருள் வெகு அழகாக.

"கண்மலரும் களிநடையும் கதை
யழகும் கைவீச்சும்
என்னேரமும் என்கண்முன் இடிக்
குதுகா என்பிறவி"

'சதா எனதுதோற்றம் உனக்கு மட்டுமா தோன்றிக் கொண்டிருக்கிறது? எனக்குந்தான்! உனது முல்லைச்சிரிப்பழகு தான் என்ன! முகத்தழகுதான் என்ன! கண்ணழகுதான் என்ன! இடையழகு தான் என்ன! மனதைவிட்டுப் போக மாட்டேனென்கிறதே', என்கிருன்,

"முல்லைச்சிரிப்பழகும் கண்ணழகும்
வல்லியிடையழகும்மனதைவிட்டுப்
போகுதில்லே"

'இப்படியாகத்தான் ஆண்கள்சொல்லிக் கொள்வது வழக்கம். மனதை மனது தானே அறியும்? எப்படித்தான் ஆசை வார்த்தைக் காட்டினுலும் என்மனதிலுள்ள வெஞ்சத்தை நீ எங்கே காணப் போகிருய்?' என்கிருள்.

"மனதை மனதறியும் வஞ்சகத்தை
நெஞ்சறியும்
என்நெஞ்சிலுள்ள வெஞ்சம் நீ
யறியப்போவதில்லை"

அவளது கவிதை ஏக்கம் கலந்ததாக எழுகிறது. ஆகவே ஏக்கத்தைத் துடைக்கவேண்டியது அவனது கடமையாகவும் மாறுகிறது. பெண்கள் தற்புகழ்ச்சியிலே திருப்தி கொள்பவராயிற்றே. ஆகவே அவளைப் புகழ்ந்து தன்னைத்தாழ்த்தி 'உன்துணைதான் வேண்டு' மென்கிருன்.

"ஏழைக்கிரங்கி மச்சாள்இனியுந்தன்
மனதிரங்கி
நாளுக்கிரங்கி மச்சாள் நல்லதுணை
தந்தாலென்ன"

தனக்குத் துணையாகும்படி அவன் கோருகிருன். ஆதலினுல் அவள் தன் நிலையை நினை வூட்டுகிருள். அதுவும்

எப்படி? அவன்மேல் அந்தப் பழியைச் சுமத்தித்தான். அப்படியாக அவள்பழி சுமத்தி அவனுக்குச் சொல்லாமல், சொல்லிக் காட்டுகிருள்

"ஈரச்சுவரானேன் இடிந்துழுந்த
மண்ணுறனேன்
பாரக்குமாரனேன் இந்தப் பார
மெல்லாம் யார்தலைக்கோ"

கவிதைகள் சங்கிலித் தொடர்போல் ஒன்றையொன்று பின்பற்றிச் செல்கின்றன. அவனைக்காணவந்த அவன் உரையாடவும் தொடங்கி விட்டான். கவிதைவளர்ந்து கொண்டே செல்கிறது. இந்த வளர்ச்சி ஒருகால் ஏட்டிக்குப் போட்டியாகவும் மாறிவிடுவதுண்டு. இராப்பொழுது முழுதும் நீடிப்பதாகவும் மாறிவிடும். அந்த நிலைக்கு அவன் வரவில்லை, அவனுக்கும்; ஏன் அனைவருக்குமே கவிதை இசைப்பது பழக்கமாக இருந்தாலும், அவன் போடிமகனல்லவா? கௌரவமாக மருதூரில் உலவுபவனல்லவா? அந்தக் கௌரவந்தான் கவிதைகளும் தனிச்சிறப்பாகின்றன, எத்தனை கௌரவம் இருந்தாலும் காதல் போதையில் இன்பநினைவுதானே முன்நிற்கும். உள்ளப்புயலை, ஆசையை, கனவை இருவரும்பரிமாறிக்கொண்டார்கள். இதோ இன்னும் சங்கிலித்தொடர்பானகவிதை எழுகிறது.

அவன், "சந்திரனுக்கும் வடுவுண்டு
தாமரைக்கும் குற்றமுண்டு
முத்துக்கும் சொத்தையுண்டு என்
மொய்குழற்குக் குற்றமில்லே"

அவள், "அச்சடியன் புத்தகத்திலே
அரும்பு கட்டிவைத்ததுபோல்
உன்ரநெற்றிப் புருவம் என் நித்திரை
யில் தோணுதுகா.

அவன், கூந்தல் அழகும் குறுஞ்
சிரிப்புப் பல்லழகும்
நெற்றி இளம்பிறையும் நித்திரையில்
கண்டேனே

அவள், வானத்தில் வெள்ளி மங்கா
மல் பூத்ததுபோல்
சினத்து வண்டே சிறை இருக்கேன்
உன்னாலே

அவன், 'மாதுளம்பூவே மலையிலடை
பொழுதே
சிங்கமகராசாத்தி நீ சிறை இருக்க
நீதியுண்டோ

அவள், புள்ளிமான் கன்றே புற
நாட்டார் ஈன்றமுத்தே
வங்கிசத்து மச்சான் உன்ர வாக்
குத் தப்பிப்போனதென்ன.

அவன், வட்டமுகத்தழகி வடிவால்
உயர்ந்த கிளி
தொட்டால் உன்னை நானும் விட்டு
விடுவேனு மச்சி

அவனும் அவளும் அழகாக உள்ளத் துணர்ச்சியினைக் கிராமியக்கவிதைகள் மூலமாக வடித்துக் காட்டுகிருர்கள். 'தொட்டால் உன்னை விட்டுவிடுவேனு' என்று அகம்மலரக் கேட்கிறுன். அந்த வார்த்தைகள் அவளுக்குக் கரும்பாக இனிக்கிறது. ஆகவே அவனைப் புகழ்ந்து இசைக்கிருள்.

"ஈரத்துளிரே மச்சான் இலங்குமந்
தச் சூரியனே
மாதாளம் பூவேமச்சான் மனக்
குறைகள் வைத்திடாதே"

அழகாக வர்ணிக்கிருள் அவனது உள்ளம் குளிர்ந்து போகட்டுமென்று. ஒருவர்மேல் ஒருவருக்கு எத்தனை அன்பு! ஆமாம் காதலல்லவா? காதல் காரம்

பற்றிக் கொண்டால் திருமணமருந்து கிடைக்கும் வரையும் அது குறைவதில்லைத்தானே! அவளது புகழ்ச்சியிலே ஈடுபட்ட அவன் தன்னைப்பற்றி அழகாகச் சொல்கிறான். தன் நிலையின் உச்சத்தைச் சொல்லி வரும்படி அன்புடன் அழைக்கிறான், ஆசைக் காதலியை.

"தங்கக் கொடிபறக்க தாதிமார் வேலைசெய்ய
வெண்சாமரம் வீசவிதி இருக்குவா மயிலே"

அவனது அன்பான காதல் அழைப்பை அவள் அகம்மலர ஏற்றுக் கொள்கிறாள். ஆனால், "உன்னை நம்பி வந்த என்னை ஏளனத்துக்கு ஆளாக்கி விடுவாயோ?" என்று சஞ்சலப்படுகிறாள்:

"ஏறுபொழுதே மச்சான் இலங்குமென் ராசாவே
சிங்கத்தின் குட்டியே சிரிக்க இடம் வையாதே"

அவள் இப்படிக்கூறிவிட்டாளேயென்று அவன் துக்கப்படுகிறான். அதனால் வைராக்கியம் மேலோங்குகிறது அவனுக்கு. எப்படியான வைராக்கியம்! மருதூர் அறிய அடுத்துவரும் நாளிலே நமது திருமணத்தை நடத்திவிடுகிறேனென்று உறுதி கொடுக்கிறான்.

"என் சீவன் கிடந்து இந்தச் சீமையிலே நானிருந்தால்
கட்டாயம் வாறநாளில் கலியாணந் தான் மயிலே"

கவிதை இசைத்து விட்டு அவன் வெளியேறுகிறான். இனி அவன் தாமதிக்க மாட்டான்தானே! அவனது வைராக்கியமான வார்த்தைகளைக் கேட்டு அவள் குதூகலப்படுகிறாள். குதூகலத்திலே தன்னைமறந்து பாடுகிறாள்.

"வந்தாரென்றால் மச்சான் வாசல் மரம் பூப்பூத்ததுபோல்
போனாரென்றால்மச்சான் பூப்பூத்து ஓய்ந்தது போல"

சென்று கொண்டிருந்த அவனது செவிகளிலே அவளது கவிதை ரீங்காரமாக ஒலிக்கிறது. அவன் சொன்னதுபோல் மருதூரே வியக்கும் வண்ணம் அடுத்த நிலவிலே அவளைத்தன் மனைவியாக்கிக் கொண்டான்.

## யாழ் கலை மன்றம்

யாழ்ப்பாண மக்களிடையே இப்பொழுது ஒருவித புத்துணர்ச்சி காணப்படுகின்றது. கலை, இலக்கியப் பணிகளை இளைஞர்கள் மிகவும் ஊக்கத்துடன் செய்வதற்கு முன்வருகின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள சில கலைஞர்களும் இலக்கிய ஆசிரியர்களும் ஒன்றுகூடிச் சென்ற 6–9–58ல் 'யாழ் கலை மன்றத்'தை ஏற்படுத்தியுள்ளனர். மன்றத்தின் தலைவராக சங்கீதபூஷணம் சண்முகரத்தினம் அவர்களும், பொதுச்செயலாளராக ஆசிரியர் முத்து. சிவானந்தன் B.A. (Hons) அவர்களும் பணி புரிகின்றார்கள். இசை, இலக்கியம், நாடகம், ஓவியம் ஆகிய ஒவ்வொரு துறைக்கும் செயலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மன்றத்தின் முதன் முயற்சியாக, புதிய பாணியில் நாடகமொன்றை நடாத்தப்போகின்றார்கள். 'மன்றம் வாழ்க வளர்க, என வாழ்த்துகின்றோம்.

*இலங்கைப் பல்கலைக் கழக மாணவர் "தளையசிங்கம்" இது வரை பல சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரது நடையில் மெல்லிய ஹாஸ்யம் செறிந்தோடுகின்றது.*

# உறவு

**மு. தளையசிங்கம்**

கடிதத்தை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டேன். இன்னும் அதைத் திருப்பித் திருப்பிப் படிக்கவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு வசனமும் அப்படியே அழகாய்க் கல்லில் செதுக்கியதுபோன்று என் மனதில் படிந்துகொண்டன. அதை நினைத்து நினைத்து மனதுக்குள்ளேயே சொல்லிக் கொள்வதில் தான் எத்தனை இன்பக் கிளுகிளுப்பு!

32, லவ்லேன்,
கண்டி.

"அன்புள்ள மூர்த்தி!

என் வாழ்வில் மறக்க முடியாத ஒரேயொரு சம்பவம் தங்களுடன் அன்று உண்டாக்கிக் கொண்ட சந்திப்பேதான். தங்களைத் திரும்பவும் காணவேண்டி ஏங்கித் தவிக்கின்றேன். தயவு செய்து நாளை மாலை என்னை எங்கள் வீட்டில் வந்து காண முடியுமா? அம்மாவும் மாமாவும் ஏதோ அலுவலாக கொழும்புக்கு போகிறார்கள். நான்மட்டுமே தனியாக இருப்பேன்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்,
நளினி"

அடித்தால் அதிர்ஷ்டம் அப்படியல்லவோ அடிக்கவேண்டும்! பின்னே, என்னைக் காணவேண்டுமென அவள் கூடக் கடிதம் எழுதுவாள் என்று கனவிலாவது நான் நினைத்ததுண்டா?

* *

"மலை எங்கே மடு எங்கே?"

அப்படித்தான் அன்று நான் எண்ணிக் கொண்டேன். அன்று களியாட்ட விழாவில் அழகு சொட்டும் வானத்து ரம்பையைப்போல அப்படியும் இப்படியுமாகத் தன் டம்பப்பையை ஆட்டிக்கொண்டு அவனுடன் அவள் சென்று கொண்டிருக்கும்போது "எனக்கும் அவளுக்குமிடையே பழக்கம் எங்கே ஏற்படப் போகிறது?" என்று தான் ஏங்கினேன்.

அந்தப் பயல், ஏதோ ஹொலிவூட்டிலிருந்து நேரடியாக வந்து குதித்தவன் போன்று தன்னை எண்ணிக்கொண்டு நடக்கும் அந்த எஸ். எஸ். வேணு—எஸ். எஸ். என்று தன் இனிஷியல்ஸ்சைச் சேர்த்துக் கொள்வதில் அவனுக்கு அலாதியான பிரியம். அந்த வானத்து அன்னம் தன் பக்கத்தில் அழகு நடைபோட்டுவர எத்தனை கர்வத்தோடு எங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான்! அந்த ஆத்திரத்தில் அவனுக்கெதிராகச்சதித்திட்டம் வகுக்க முயன்ற என் நண்பர்களுக்கும் எனக்கும், உள்ளூர அவளை அடைவது அரிது என்ற எண்ணம் அப்போது தொட்டே இருந்து வரத்தான் செய்தது.

ஆனல் இன்று அதே அவள் தன்னை வந்து காணும்படி எனக்குக் கடிதம் போட்டிருக்கிருள்! என்னுடைய திறமையில் இன்றுதான் எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது. வில்லன் பாத்திரம் ஏற்று அதில் வெற்றியும் காண்பது கதைகளிலும் சினிமாக்களிலும் முடியாத காரியமாக இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையிலாவது நிஜ வாழ்க்கையில் அது இயலும் போலல்லவோ இருக்கிறது!

அன்று........,

'மட்டினிசோ ஆரம்பிக்க நேரமாகிவிட்டது. அவசர அவசரமாகச் சைக்கிளில் பறந்தேன். இருந்தும் ஐந்து நிமிடங்களுக்குக் கிட்டத் தாமதமாகிவிட்டது. முதலாம் வகுப்பு டிக்கட்—கலரி, செக்கன்ட் கிளாஸ் எல்லாம் காலியாகி விட்டன-ஒன்றை வாங்கிக்கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தேன். எங்கோ ஒரு மூலையில் காலியாகி இருந்த சீட் அண்டை அழைத்துச் சென்றுவிட்டான், அசிஸ்டண்ட் கேட்கீப்பர். தட்டுத் தடுமாறியவண்ணம் உட்கார்ந்து கொண்டேன்.

படத்தின் விறுவிறுப்பான கட்டம் கதாநாயகன் கதாநாயகியை முதன் முதலாகச் சந்திக்கும் கட்டம் - அப்போதுதான் ஓடிக்கொண்டிருந்தது-சூழலைமறந்து படத்தில் முற்ருக லயித்து விட்டேன்.

ஐந்து நிமிடங்களோ பத்து நிமிடங்களோ சென்றுவிட்டன. வழக்கத்துக்கு மாருக இன்னும் படம் விறுவிறுப்பாகவே ஓடிக்கொண்டிருந்தது.

அந்தநேரத்தில் ஏதோ ஓர் இன்பக் குளிர்ச்சி என் வலது கையை அமுக்கிக் கீறிக் கோடிட்டு விளையாடுவது போலிருந்தது! ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

நெளிவளையல்கள் நிறைந்த தளிர்க் கரம் ஒன்று என் வலது கையுடன் ஒட்டி இணைந்து ஏதோ திட்டம் வகுத்துக் கொண்டிருந்தது!

பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினேன்,

'பளிச்' சென்று அந்த மெல்லிய இருட்டில் முல்லைத்தோட்டம் ஒன்று மின்னி மறைந்தது!

சினிமாப்படத்துக் கதாநாயகியோ யாரோதான் தெரியாமல் இங்கு வந்து குதித்துவிட்டாளோ? அல்லது தியேட்டர் திரைதான் என்பக்கம் ஓடிவந்து விட்டதோ?

திரும்பித் திரையைப் பார்த்தேன். படம ஓடிக்கொண்டுதான் இருந்தது,

சந்தேகம் தெளிந்தபின் அவள்பக்கம் திரும்பினேன்.

இமையின் இடது கோடியிலிருந்து எட்டிப்பார்த்து இரகசியம் பேசும் அந்தக் கரிய பெரிய விழிகள், குமுத மொட்டுப்போல் குவிந்து துடிக்கும் அந்த உதடுகள், அத்தனை இருட்டில் கூட தக்காளிப்பழம்போல் சுத்தச் சிவப்பாகக் கொப்பளிக்கும் அந்த கன்னங்கள் எங்கோ முன்பு பழக்க மானவை போலல்லவோ தெரிகின்றன. ஒருவேளை சினிமாப் படத்தில்தானோ இல்லை, இல்லை, அந்தக் களியாட்ட விழாவில்!—ஈஸ்டர்ன் கார்ணிவலில்!

ஆம், அன்று அந்த எஸ். எஸ். வேணுவோடு சுற்றித் திரிந்தாளே அந்தச் சுந்தரி அவளேதான்! "அவள் எங்கே, நான் எங்கே?" என்று என்னையே என்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரச் செய்தாளே அந்த டம்பப் பைக்காரி, அவளேதான் இப்போ என்னருகே இருந்து "உங்களுக்காகவேதான் காத்திருந்தேன்" என்று சொல்வதுபோல் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்! அவளின் வளையல் கரமேதான் இன்னும் என்கையோடு இணைந்து என் உடம்பெல்லாம் இன்ப அலைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது!

ஒற்றைக்காலில் நின்று ஒரு கோடி ஆண்டுகள் தவம்செய்தாலும் நெற்றிக்கண்ணன் தரமறுக்கும் வரமொன்றை கேவலம் இந்த அற்ப சந்தர்ப்பம் இப்படி அள்ளிக் கொடுத்திருக்கிறதே!

இருந்தும் கொஞ்சம் கூச்சமேதான். ஆனால் அதிக நேரமில்லை. அவளே 'இனிஅயேட்டிவை'க் கொடுக்கும் போது நான் ஏன் கோழையாகக் கிடக்கவேண்டும்?

வெகுசீக்கிரத்தில் எங்கள் கரங்கள் மட்டுமல்ல தோள்கள்கூட இரட்டைச் சகோதரர்கள் போல் ஒட்டிக்கொண்டன. படத்திலே கதாநாயகன் தன் காதலியை அள்ளி அணைத்தான், அவளின் கன்னங்களைக் கிள்ளினான், காதல் பாட்டுப்பாடினான், காரிலே ஏற்றிக் கொண்டு சவாரி சென்றான். ஆனால் அவர்களால் ஒன்றரை மணி நேரத்துக்கு, ஒன்றாய் ஓர் உடலாய் ஒட்டிய வண்ணம்ஏதும் சலனமின்றி எங்களைப் போல் பேசமட்டும் முடியவில்லை!

"இடை வேளை"

'பளிச்' சென்று மின்விளக்குகள் மின்னின,

'டிரிங், டிரிங்' என்று சோடாபுட்டிகளில் கட்டர்கள் உராயப்பட்டு ஓசை எழுந்தது.

மெதுவாக எழுந்து வெளியே சென்று அவசர அவசரமாய் வெள்ளைக் கடதாசித்துண்டும் பௌண்டன் பேனை ஒன்றையும் தேடிக்கொண்டேன். கிடைத்த துண்டில் "தங்களைப் பற்றி அறிய ஆவலாய் இருக்கிறது. தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்குத் தங்களால் கடிதமொன்று போடமுடியுமா?" என்ற குறிப்புடன் என் விலாசத்தையும் எழுதிக்கொண்டு தியேட்டருக்குள் நுழைந்து முன்போல் அவளுக்கருகில் அமர்ந்து கொண்டேன். அவள் ஒரேன்ஜ் பார்லி பருகிக்கொண்டிருந்தாள். அடுத்தபக்கத்தில் இருந்த பெண்ணை இப்போதுதான் தெளிவாகப் பார்த்துக் கொள்ள முடிந்தது. அவளின் அம்மாவாக இருக்கவேண்டும். ஆனால் எத்தனை அலங்காரம்! பத்துப்பதினைந்து

வயத்தை அது கண்களுக்குத் தெரியாமல் அப்படி விழுங்கிக்கொண்டிருந்தது! மேக்கப் பண்ணுவதில் ஹொலிவூட் கூட இவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும்!

அவளுக்கு அப்பால் சூட்டும் கோட்டுமாய் நடுத்தரவயதான கனவான் ஒருவர் அமர்ந்திருந்தார். அவளின் தந்தையாகத் தெரியவில்லை. மாமாவாகவோ சித்தப்பாவாகவோ இருக்க வேண்டும். கோட்டுச் சூட்டுக்கு ஏற்றவாறு அவரின் பேச்சு இருக்கவில்லை. சிகரட் டொபி விற்பவனுடன் அனுவசியமாகக் கதையளந்து கொண்டிருந்தார்.

இடைவேளை முடிவடைந்தது,

'கிணு கிணு' வென்று மூன்றும் மணி ஓசை எழும்பி ஓய்ந்தது.

விளக்குகள் ஒவ்வொன்ருய் முற்ருக அணைந்து விட்டன.

திரைக்கதை ஆரம்பித்து திரும்பவும் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை ஒடியது. அந்த இடைக்காலத்துக்குள் திரைக்கதையின் போக்கிலே எத்தனை எத்தனையோ மாற்றங்கள், சூழ்ச்சிகள், சிக்கல்கள் வந்து சென்றன. காதல் கதறல், சண்டை, சமாதானம், இறப்பு, பிறப்பு இன்னும் எத்தனை எத்தனையோ .......சரியாக ஞாபகமில்லை.

ஆனல் நம்மிருவருக்கு மிடையே நடந்த கதையின் போக்கோ முன் போலவே இருந்தது. அதே விறுவிறுப்பு, அதே ஐக்கியம், அதே சிக்கல் கள். சரியாகச் சொல்லப்போனல், கடதாசித்துண்டை அவள் கையில் நான் திணித்ததையும் அதை அவள் பத்திரமாக ஜாக்கட்டுக்குள் புதைத்துக் கொண்டதையும் தவிர வேறு எந்த வித முக்கிய மாற்றமும் எங்கள் கதைப் போக்கில் புகுத்தப்படவில்லை. சுற்றிலுமுள்ள சென்ஸர் போர்ட்டார் பார்த்து விட்டால் 'கட்' பண்ணியல்லவோ விடுவார்கள், கட் பண்ணி!

'வணக்கம்'' வளைந்து நெளிந்து திரையில் தெரிந்தது. அவளைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றேன்.

அதற்குப் பின் மூன்றுநாட்கள்கூட ஆகவில்லை, அதற்குள் அவள் கடிதம் எழுதிவிட்டாள்!

எத்தனை நல்லபெண் அவள்!

அந்தனை அதிர்ஷ்டசாலி நான்!

பொங்கி எழுந்து என் இதயத்தை நிரப்பிய சந்தோஷம் என்னை ஓர் இடத்தில் இருக்கவிடவில்லை. தாவிச்சென்று சைக்கிளை எடுத்துக்கொண்டு எங்கெல்லாமோ சுற்றத்தொடங்கினேன்,

மணி 5–30 இருக்கும், நகரத்தின் நடுவே இருக்கும் பூங்காவின் ஊடாக மெய்மறந்து சென்று கொண்டிருந்த என்னை பக்கவாட்டில் இருந்து எழுந்த ''கல கல'' வென்ற சிரிப்பு ''கறண்ட்'' போல் இழுத்தது. திரும்பிப்பார்த்தேன்.

திகைப்பு என்னைச் சிலையாக்கியது!

பார்க்கின் மூலை ஒன்றிலிருந்த பெஞ்சின்மேல் அந்த அம்மாள்—நளினியின் தாய்—வேறு ஓர் ஆடவனுடன் கொஞ்சு மொழி பேசிக் கொண்டிருந்தாள்! அவளின் இடையைச் சுற்றி தன்கையை வளைத்த வண்ணம் கதைபேசிக்கொண்டிருக்கும் அந்த ஆடவனை எங்கோ கண்ட ஞாபகமாகஇருந்தது....... ஆம், அன்று அவர்களுடன் சினிமாவுக்கு

வந்திருந்தவனே தான்! தன்மாமா என்று நளினி எழுதியிருக்கிறுளே அவனே தான்! கன்னத்தைக் கிள்ளி அவன் காதல் வார்த்தைகள் பேசுவது என் காதில் அறைந்தாற்போல் விழுந்து கொண்டிருந்தது. இன்னும் அங்கே நிற்க என்னுல் முடியவில்லை. வீடு நோக்கிச் சைக்கிளைத் திருப்பினேன். வந்த வேகத்தில் இப்போ பாதிகூட இல்லை.

எண்ண வண்டுகள் என் மூளையைக் குடையத் தொடங்கின.

மாமா என்றல்லவோ எழுதியிருந்தாள்! அப்படி என்றுல் எப்படி அந்த அம்மாளுக்கு அவனுடன் காதல் ஏற்படும்? அந்த அம்மாளின் சகோதரனுகவல்லவோ இருக்க வேண்டும்?

'எது எப்படியாய் இருந்தாலும் எனக்கென்ன? என் நளினியையல்லவே அவன் காதலிப்பது? எனவே நான் ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று இடைக்கிடை மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டாலும் ஏதோ ஒன்று என்மனதை அரித்துக்கொண்டே இருந்தது. எப்போது நாளையாகும் அவளைப் போய்ச் சந்திப்பதற்கு என்று ஏங்கிக் காத்திருந்தேன்.

அடுத்த நாள். இன்னும் மாலை வரவில்லை. அதுவரைக்கும் என்னுல் காத்திருக்க முடியவில்லை. மத்தியானம் இரண்டு மணிக்கே அவள் வீடு புறப்பட்டுவிட்டேன்,

எப்படியோ தேடிப்பிடித்து அவளின் வீட்டைக் கண்டு கொண்டேன். சிறிய வீடுதான். ஆனுல் அழகாகவே வெளிப்புறம் காட்சி அளித்தது. கேட்டைத் தாண்டி வீட்டு வாசலை நோக்கி நடை போட்டேன்,

'கலகல' வென்ற சிரிப்பொலி வீட்டுக்குள்ளிருந்து புறப்பட்டு கம்பவுண்டைத் தாண்டிப்பரவியது, சிரிப்பதுந் தான் இவர்களுக்கு ஒரு கலையோ! முன் வாசலில் யாரும் இருக்கவில்லை எல்லோரும் நடு ஹாலில் போலும். பேச்சு மட்டும் தெளிவாகக் கேட்டது.

"வா கண்ணே கிட்டே சும்மா தாஜா பண்ணுமே"

நேற்றுமாலை பார்க்கில் கேட்ட குரல்! அந்தக் காதல் காட்சியின் தொடர்ச்சிபோலும்!

"ஆ! ஐயோ, சும்மா இருங்களேன்",

"........................."

"ஹி ஹி ஹி!"

"ஹி ஹிக்"

"........................."

அத்துடன் நான் அவர்களைக் குழப்பாமல் மரியாதையாகத் திரும்பிச் சென்றிருக்க வேண்டும். ஆனுல் ஏதோ ஒன்று என்னை அப்படிச் செய்ய விடவில்லை. தொண்டையைக் கனைத்துக கொண்டு படிக்கட்டைத்தாண்டி வீட்டுக்குள் நுழைந்தேன்.

சத்தத்தைக் கேட்டோ என்னவோ பரபரப்போடு முந்தானைச் சேலை நிலத்தில் விழுந்து புரண்டுதவழ, இரு புத்தர்கோயில்கள் பாதி திறந்த ஜக்கட்டினூடாக எப்படிப்பார்த்துக் கொண்டிருக்க ஏதோ வீனஸ்சிலையே தான் உயிர்பெற்று வந்து விட்டதோ என்று ஏங்கும்படி அந்த அம்மாள் வாசலை நோக்கி ஓடி வந்தாள்.

நேற்றுமாலை பார்க்கில் பார்க்கும் போது இருந்ததைவிட இன்று எத் தனை மினுமினுப்பு! இளமைப் பொலிவு.

ஐயையோ அவள் அந்த அம்மா ளல்லவே! ......என்......என்னைவரச் சொல்லிக்கடிதமெழுதிய ந ...ந...நளினி யல்லவோ!

ஒரு கணம் என் தலைசுற்றியது.

நிலமையைச் சமாளித்துக்கொண்டு அவளைத் திரும்பவும் பார்த்தேன் அதே நிலை! கலைந்த ஆடை, குலைந்த கொண்டை! கண்களில் மட்டும்புதிய போதை! ஆடையைச் சரிப்படுத்த வேண்டுமென்ற அக்கறையே இல்லை. மாறாக தொங்கிய தாவணியை நளின மாகக் கையில் தூக்கிய வண்ணம் "மிஸ்டர் மூர்த்தி வாருங்கள் உள்ளே ஏன் பயப்படுகிறீர்கள்?" என்றுபோதா ததற்கு என்னை வரவேற்கவும் செய் தாள்!

"ஹிஹிஹி...வாருங்கள். வாருங் கள்...ஹிஹிஹி" என்று சுருதிகூட்டி னார் அவளுக்குப் பின்னால் வந்த அந்த "மாமா"!

ஆனால் படிக்கட்டை விட்டிறங்கிச் சென்று கொண்டிருந்த என் கால்கள் ஏனோ அவற்றைப் புரிந்து கொள்ள மறுத்துவிட்டன.

"மாமாவாம் மாமா! தாய்க்கும் மாமா! சை, இந்த "மாமா" என்ற வார்த்தைக் குத்தான் எத்தனை அர்த்தம்!" என்று என் இதயம் மட்டும் முணுமுணுத்துக் கொண்டது.

---


சிறுவர் புத்தி விருத்திப்போட்டி இல. 8

இது. தீபாவலி-விசேஷ பரிசுப்போட்டி

மொத்தப் பரிசு ரூபா 1000-00

முடிவு திகதி 12-11-58

"நாடோடி"

மாதப்பத்திரிகையிலுள்ள அச்சுக்கூப்பன்களிலேயே விடைகள் எழுதப்படவேண்டும். அரியகதைகள் கவிதைகள் கட்டுரைகள் அடங்கியது.

நாடோடி தனிப்பிரதி 7 சதம்

தபாலில்பெற விரும்புகிறவர்கள் 10 சத தபால் தலை அனுப்புக.

வருடச் சந்தா ரூபா 1-25 சதம்

நாடோடி, அக்கரல்ல, ஒப்பநாயக்கா.

*இலுப்பைக்குளத்தில் ஆயுர்வேத வைத்தியராக இருக்கின்றார் இவ் எழுத்தாளர். ஈழத்துப் பத்திரிகைகளிலெல்லாம் எழுதியுள்ளார். தமிழர் களிடையேயுள்ள முக்கிய துறையொன்றை காசூக்காக எடுத்துக் காட்டு கின்றது 'தகரவிளக்கு'.*

# தகரவிளக்கு

**எஸ். எல். சவுந்தரநாயகம்**

அப்பு செய்த விளக்குகள் தானே மண்ணை திறமான விளக்குக ளெண்டு..."

"திறமான விளக்குக ளில்லாமலா தம்பீ—அப்பு செய்த விளக்குகளைப் பற்றி எங்கேயோ ஒரு ஊரிலை நல் லாய்க் கதைச்சினமெண்டு பொன்ன ண்ணர்கூட அண் ணைக் கொருநாட் சொன்னவர்! ஏன்? எங்கடை கந்தை யா அண்ணையுஞ் சொன்னவர்தானே"

—இவ்வாறு இரண்டு சிறுவர்களுக் கிடையில் நடந்தவொரு உரையாடல்; எனது 'டோர்ச் லைட்'டின் உதவியுடன் அந்தத் தெருவருகிலொரு சிறியவீடு இருக்கிறதென்பதை உணர்த்தியது.

அந்தத்தெரு மின்சார வெளிச்சத் தின் வாடையே வீசாத, கிராமத்துக் குப் போகும் பாதை. அந்தச்சாலை காதற்பாதை போன்று, கல்லும் முள் ளும்மேடும்பள்ளமுமுடையவொருமண் வீதி. நேரமும் இரவு நேரம். காரி கையின் கார்குழலைப் பழிக்கும் "பாக் கர் இங்க்" இருட்டு.

தங்களுடைய இல்லத்திற்கு 'லைட்' பிடித்தனைப்பக் கன்னூற்ற, சுமார் வயசு —பத்தும் பன்னிரண்டும் மதிக்கத்தக்க இரண்டு சிறுவர்கள் வெளியில் வந்த னர். அவர்களைக் கண்ட நானும் அவ்வீடத்தில் சற்றுத் தாமதித்தேன்...

'அப்பு செய்த விளக்குகளென்று ஏதோ கதைத்தீர்களே தம்பி! அதென்ன விஷயம்?"—இது என்னுடைய கேள்வி.

அந்தக் கிராமத்தி லே தகர விளக்குச் செய்வதில் அவர்களி ன் தந்தை மிக வும் பிரபலமானவர். எல்லா ஊர்களி லும் அவர் புகழ் பரவியுள்ளது. துர திர்ஷ்ட வசமாக சில நாட்களுக்கு முன் அவர் இறந்துவிட்டார். அவர்க ளுக்கு இன்னும் இரண்டு சகோதரர் கள் அண்ணனும். தம்பியும் இருக் கின்றார்கள். தகப்பனின் தொழிலை, அவர்களில் மூத்தவன் செய்ய, அத னால் வரும் ஊதியத்தைக் கொண்டு அந்த நால்வரும் சீவியஞ் செய்கின் றார்கள். வெகு காலத்திற்கு முன்பே அவர்களின் தாய் இறந்துவிட்டாள்— இந்த விபரங்களை அந்தச் சிறுவர்கள் எனக்குக் கூறினார்கள்.

"உங்கள் அண்ணாவும் தம்பியும் தற் பொழுது எங்கே போயிருக்கிறார்கள்?" என்று நான் கேட்டேன்.

"அண்ணையும் தம்பியும் விளக்கு விக்கப் போயிருக்கினம். இனி வந்திடுவினம்......" என்று அவர்கள் விடையிறுத்தனர்.

இராசநாயகம், சிவலிங்கம், பாலு, சோமு என்று, தங்கள் நால்வருடைய பெயர்களையும் வரிசைக்கிரமப்படி அறிமுகப்படுத்தியும் கொண்டனர், அச் சிறுவர்கள்.

"இந்தச் சிறு வயதிலேயே தங்கள் தகப்பனுரைப் பற்றியும் இந்தச் சிறுவர்கள் வானளாவப் புகழ்கின்றனரே!" என்ற வியப்பு மேலிட்டவனுக நேரம் போவதே தெரியாமல் போன அலுவலையும் மறந்தவன்போல் அவர்களுடன் உரையாடிக்கொண்டுநின்றேன்... கைக்கடிகார முட்கள் எட்டு மணியைக் காட்டுவதற்குத் துடித்துக் கொண்டு சென்றன...

அவ்வேளையில்: வேறு இரண்டு சிறுவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் அவ்விடம் வந்து சேர்ந்தனர்.

அவர்கள்தான்—இந்த இரண்டு சிறுவர்களும் சொன்ன இவர்களின் சகோதரர்களாயிருக்க வேண்டுமென்ற எனது ஊகம் தவறவில்லை.

"தம்பி! வீடு இருட்டாயிருக்கிறதே இன்னும் விளக்குக் கொளுத்தவில்லையா? இவர் யார்?" என்ற பிணையற் கேள்வி, வந்த இரண்டு சிறுவர்களிற் பெரியவனுடைய வாயிலிருந்து உதிர்ந்தது. அவனுக்குச் சுமார் பதினுலு வயசுதான் மதிக்கலாம்.

"இவ்வளவு நேரமும் விளக்குக் கொளுத்தாமல் என்னண்ணை செய்த நீங்கள்? லாம்பெண்ணை நெருப்புப் பெட்டி யெல்லாம் வீட்டை யிருக்குது தானே?" என்று, சற்றுத் துடிப்பாகக் கேட்டான், வந்த சிறுவர்களிற் சிறியவனுன பையன். அவனுக்குச் சற்றேறக் குறைய எட்டுவயசுதான் மதிக்கலாம்.

"கொளுத்...து .... வ...மே! இப்ப என்ன அவசரம்?"

"அதெடா தம்பி...ஈ! அப்பு விளக்குச் செய்யிறதில் கெட்டிக்காரரென்று இவரோடே கதைச்சுக் கொண்டு நிண்டம். இவர் உங்கையெங்கையோ போக வந்தவராம்!" என்றனர், என்னுடன் ஆரம்பத்திற் கதைத்துக் கொண்டு நின்ற சிறுவரிருவரும்!

"சரி சரி! வாருங்கள் வீட்டைபோவம்!" என்ற பெரிய பையனின் கட்டளைப்படி நால்வரும் தங்கள் வீட்டுக்குட் சென்றனர்.

விளக்குப் பிரகாசித்தது...மறுகணம் "ஐயையோ பாம்பூ! பாம்பு!" என்ற கூச்சல் கேட்டது...

பாம்பென்றுல் இராணுவச் சிப்பாய்களே நடுங்குவார்களென்றுல், அந்தச் சிறுவர்கள் எம்மாத்திரம்?

உடனே உதவிக்கு நானும் ஓடோடிச் சென்றேன். பாம்பை ஒருவாறு அடித்துக்கொன்று புதைத்து விட்டோம். நல்லபாம்பென்றழைக்கப்படும் கொடிய விஷமுள்ள நாகபாம்புதான் அவர்கள் வீட்டுக் கூரைக்குள்ளிருந்தது...

செத்த பாம்பின் பூமிப் பிரவேச வைபவம் முடிந்ததும், சிறுவர்கள் தேநீர் போட்டுத் தந்து என்னை உபசரித்தனர்...

"நால்வரும் சரியான புத்திவிபரமறியாத சிறுவர்கள்தான். என்றாலும்.... வீட்டுக்குள் விளக்கையும் விஷப்பாம்பையும் வைத்துக்கொண்டு, வீட்டுக்கு விளக்கேற்றாமலே இருளில் நின்ற வண்ணம் தங்கள் தந்தை செய்த விளக்கைப்பற்றிப் பெருமை பேசிப் பேசி, காலங்கடத்திய சிறுவர்களை விட -வீட்டுக்கு விளக்கேற்றி அதன்மூலம் விஷப்பாம்பினால் தங்களுக்கு வரவிருந்த மாபெரும் ஆபத்தை நீக்கிய சிறுவர்களிருவருந் தான் எதிர்காலத்தில் வாழத்தெரிந்த-மற்றையோரையும் வாழ வைக்கத் தெரிந்த—புத்திசாலிகள். அவர்கள்தாம் தங்கள் தந்தையின் பெருமையைத் தாரணியில் நிலைநாட்டக்கூடியவர்கள்..." என்ற சிந்தனையுடன் சிறுவர்களிடம் விடை பெற்றவனாக என் வழியே புறப்பட்டேன்.

அவர்களிடம் பழகிய அவ்வளவு நேரமும் கேளாதவொரு கேள்வியை அவர்களை விட்டுப் பிரியும் நேரத்திற்றான் பின்வருமாறு கேட்டேன்...

"உங்கள் தகப்பனாரின் பெயரென்ன தம்பி?"

"பாரதி!"—இது அந்தச் சிறுவர்களின் ஏகோபித்த பதில்.

---


# எம்மிடம் வருக

- சிற்றுண்டி, தேநீர்
- சுத்தமான சைவ உணவு
- மற்றும் பல

உங்கள் பெயர், முகவரிகள் அழகாக
பிளாஸ்டிக்கில்

செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகைகள்
புத்தகங்கள்
கிடைக்குமிடம்:
இன்ப நிலையம்,
சுன்னாகம். இலங்கை.

*கவிஞர் முருகையன் கல்வயலைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர். இவரது கவிதை மணிகள் பல இலங்கை இந்தியப் பத்திரிகைகட்கு ஒளியூட்டியுள்ளன. யா. த. எ. சங்கம் நடாத்திய பாரதி விழா—கவியரங்கத்தில் அன்பர் பாடிய பாடலை மகிழ்ச்சியுடன் தருகின்றோம்.*

# பாரதி வகுத்த பாதை

**— முருகையன் —**

பாரதியை நெஞ்சிற் பதிக்கும் நினைப்புடனே
ஊர்திரண்டு வந்தே உவந்திருக்கும் மாசபையின்
சீர்சேர் தலைவா! செழுந்தமிழைக் காதுவழி
கொண்டு மகிழ்ச்சிக் குளத்திலே நீச்சல் இட
ஆயத்த மான அரங்கோரே! உங்களுக்கென்
அன்பு கலந்தபல அஞ்சலிகள்.
சொல்தொடுத்துப்
பாவினத்திற் சீவசத்தைப் பாய்ச்சிக் கவிதைகளால்
ஓவியங்கள் காட்டும் உயர்ந்த திறனுடைய
நல்ல கவிகாள்! நமது வணக்கங்கள்.
"பாரதியார் காட்டிவைத்த பாதைஎது என்பதனை,
ஆரும் அறிய அரங்கத்திற் கூறும்", என
உத்தரவு போட்டுவிட்டார் உந்தச் செயலாளர்.
அத்தகைய 'சேவீ' சடியேன் புரிவதென
எண்ணித் துணிந்து விட்டேன்
என்றாலும், நானோ
இலக்கணத்தை ஓங்கி இடித்துவந்த தூளை
உலக்கை நுனியில் ஒருசிறிதும் இன்றி
வழித்துக் கரைத்த மருந்தை வயிற்றுட்
செலுத்தி அடக்கிவிட்ட சித்தனல்ல;
என்றாலும்,
கல்லுத் தெருவிற் கடக்கும் வண்டியைப்போல்
பல்லை உடைக்கவல்ல பக்குவத்திற் சொற்களினைக்

கூட்டிக் குவித்துக் குறைஉறுப்பு நொண்டிகள்போல்
பாட்டுப் படைக்கும் பழக்கம் உடையவனும்
அல்லன்;
அதனால், அரங்கோரே! என்கவியைச்
சில்லறையாய் எண்ணிச் சிரிக்காதீர்
வாரும் ஐயா!
வேண்டாம் 'மினைக்கேடு';
மேற்குப் புறத்தெருவாற்
சென்று திரும்பும் திருப்பத்திற் கால்வைத்தால்,
பாரதியார் காட்டிவைத்த பாதைக்கு வந்துவிட்டோம்
நேரியதாய் எங்கும் நெடிய மரவரிசை
தண்ணென் றிருக்கும் தமிழ்போல் நிழல்விழுத்தி
அண்ணாந்து பார்க்கும் அளவிற் குயர்ந் திரண்டு
பக்கத்தும் இன்பம் என்ற பச்சைநிறம் தாங்கி நிற்கும்
துக்கத்தை வென்று தொலைத்த பெரியவர்கள்
அங்குமிங்கும் செல்லும் அழகினைநீர் கண்டீரோ
எங்கும் என்றும்காணா இயல்பிதிலே என்னவென்றால்
பாரதியின் பாதையிலே பற்றுமிகுந் தேகிடுவோர்
ஊரை வெறுத்தும் உறவைப் புறக்கணித்தும்
காவிசுற்றித் தாடிவைத்தும், காட்டுக்குச் சென்றோடி
சீவபக்கு வத்தைத் தெரிந்து கொள்ளார்;
மக்களிடை
மக்களாய் வாழ்ந்து, மனித குலம்சிறக்கத்
தக்க செயல்கள் தமைச்செய்து, நாள்தோறும்
நம்மிடையே வாழுகிற ஞானிகளே அல்லாமல்
பட்டினியால் மோட்சவழிப் பாலம் கடந்துவந்த
ஆன்மாக்கள் அல்லர்—
அவருடைய பாதையிலே
தாயின் கொடியைத் தடக்கை மறவர் பலர்
ஆயிரவர் சுற்றி அணிவகுத்து நிற்பதையும்;
வந்த விடுதலையை வாயார நெஞ்சாரச்
செந்தமிழிற் பள்ளுகளைச் செய்து களித்தாடும்

பாரதத்து மன்னர் பலரும், பழையமுனி
நாரதர்க்கும் வீணை நயத்தைப் பழக்கவல்ல
சங்கீத ஞானத் தமிழ்மகளிர் பாடுகிற
சிங்காரமான சிறந்த இசை வகையும்,
ஓங்கி முரசை ஒலித்து, மிக்க வெற்றி தன்னைத்
தாங்கா மகிழ்ச்சி மிடுக்கோடு சாற்றுவதும்,
அந்தக் கவிஞன் அமைத்த வழிதனிலே
வந்துவிட்டோர் சாவை மதிக்காத பான்மையினுல்
கூற்றுவனை ஏற்றும் கொழுத்த எருமை, கருஞ்
சேற்றைவிட்டு நீங்காச் சிறப்பும் இவையெல்லாம்,
பார்த்தீரோ, தோழர்களே!
பாரதியார் பாதையிலே
வேர்த்தே உழைப்பவர்கள் மேன்மைபல பெற்றமையும்
ஏழைமையை வென்றுவிட்ட இன்பப் புதுஉலகும்
தாழ்வுகளைக் கொன்றுவிட்ட தன்மையுள்ள மாந்தர்களும்
காணப் படுகின்றுர்.
கண்டீரோ, நண்பர்களே?
ஆணுக்கு நேராய் அரிவைக் குலத்தினரும்
பூணும் சமத்துவத்தின் பொன்னெறியிற் செல்வதையும்
பெண்ணை இழிவாகப் பேசுகிற மூடர்களின்
கண்கள் குருடாகிக் காட்சி இழந்தமையும்,
பட்டங்கள் பெற்றுவந்த பாவையர்கள் நம்மெதிரே
ஒட்ட நறுக்காத ஒண்கூந்தல் உள்ளவராய்,
பூச்சடித்த மாமுகத்தைப் போற்றுத போக்கினராய்
ஆச்சரியமான அவர்களது சொந்த எழில்
தாங்கி நடமாடும் தன்மையையும் கண்டீரோ?
தீங்குகளை எல்லாம் சிதறடித்து வேரோடு
பேர்த்துப் பொசுக்கியதாற் பீடைகளின் கூட்டத்தைத்
தீர்த்துவிட்ட வையம் சிவலோகம் ஆகிவிட்ட
பான்மையையும் எல்லாம் எம் பாமன்னர் பாரதியார்
காட்டிவைத்த பாதையிலே கண்டிருப்பீர்;
வாரும் ஐயா!

நீண்டு வழியில் நெடுந்தூரம் வந்துவிட்டோம்
அப்பாலே செல்வோம்;
அதோ பாரும் பாரதியார்!
கூரியதாய் மீசை; குலவும் தலைப்பாகை
சுற்றி அணிந்திருக்கும் தோற்றம்;
உறுதியுடன்
வெற்றி மிடுக்கும் மிருய்ப்பினையும் பாரும்
கறுப்புநிறச் சட்டை, கழுத்தில்வெண் பட்டி
உறுப்புகளோ நோக்கின் உரத்தைப் படம்பிடிக்கும்.
பாடல் உலகிற் பலரைப் புறங்கண்ட
பீடு நடைகொள் பெரிய கவிஞர் இவர்
என்ன இங்கு செய்கின்றார்?
ஏதோ நெடுங் கனவின்
பின்னணியிற் பொங்கிவரும் பெண்மை முகநிலவைக்
கண்டவரைப் போலன்றோ கண்கள் விரிவடையப்
பூரித்துப் போய்விட்டார், பொன்றாத் தமிழ்க்கவிஞர்
மங்கல நிலவினிலே வந்த அழகென்னும்
திங்கள் முகம்படைத்த தெய்விகத்தைக் கண்டுவிட்டார்
போலும் எங்கள் பாராதியார்!!
புந்தி மகிழ்வெய்திச்
சாலத் திளைத்தாரே போலும், அந்தத் தண்நினைவில்
குக்குக்கு என்ற குரலிற குயில்சொல்லும்
தக்க பொருளைத் தமிழிற் பெயர்ப்பதற்குச்
சர்க்கரையைப் போன்ற தனிமைச் சுவைமிக்க
சொற்களிடைத் தேர்தல் தொடங்கிவிட்டார் போலும் அவர்
மெத்தப் படித்துவிட்ட மேதைகளே அல்லாரும்
நித்தம் படிக்க நினைக்கும் படிசந்தம்
தேடுவதிற் சித்தம் செலுத்தி இருந்தாரோ?
பாடுகிறோம் பாட்டென்று பாரதியின் பாட்டுக்களைப்
பிய்த்துப் பிடுங்கிப், பெயர்த்துப் பிராணனையும்,
சத்தைப் பிழிந்துவிட்டுச் சக்கையினைத் தங்களது

சிம்மக் குரலிற் செலுத்தி வெளிப்படுத்தும்
தன்மைத் திறமுள்ள சங்கீத மேதைகளின்
தொண்டைகளைப் பூட்டிட்டுத் தொந்தரவை ஓட்டுமுறை
கண்டு பிடிக்கும் கருத்திலே சிந்தனையில்
ஆழ்ந்துபோய் விட்டாரோ?
ஆலோசனை ஏனோ?
பாவம் இருக்கட்டும் பாரதியார்;
எங்களினுற்
பாவலரின் மோனம் பறிபோய்க் குறைந்திடுதல்
கூடாது;
மெல்லக் குனிந்து வந்து நம்வழியே
வாடாத பூக்கள் மலரும் பொழில்நீங்கி
எங்கள் உலகில் இறங்குவோம்;
செட்டைகளைப்
பங்கப் படுத்தாதீர்;
பக்குவமாய் நீக்கும், ஐயா!!
வாரும் ஐயா!
எங்களது மற்றக் கவிஞர்களை
ஆர்வமுடன் கேட்பீர் அமர்ந்து.

---


வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

கதைகள், கட்டுரைகள், கவிதை அரங்கம், பேனு நண்பர் சங்கம், மாணவர் மன்றம், மகளிர் பகுதி, நேயர் குரல், அறிவுப்போட்டி, இன்னும் பல,

**தனிப்பிரதி: 15 சதம்**

**வருடசந்தா: 2 ரூபா 50 சதம்**

வெற்றிமணி

பூண்டுலோயா இலங்கை

*சென்ற இதழில் டொமினிக் ஜீவா எழுதிய 'இங்நாட்டு மன்னர்' என்ற கதையின் சூழலை உபயோகித்து எழுதப்பட்டது "அவர்க்கும் உண்டு இதயம்" பல்கலைக் கழக மாணவர்கட்கு 'பய்லா' ஆட மட்டுமல்ல, பண்புடன் நடக்கவும் தெரியும் என்பதைக் காட்டுகின்றது கதை.*

# அவர்க்கும் உண்டு இதயம்

"எம்ரீயெஸ்"

"ரைட்! ரைட்!"...கண்டக்டர் கத்தினன்.

நின்று கொண்டிருந்த பஸ் மீண்டும் ஓடத்தொடங்கியது பஸ்ஸில் தொத்திய பிரயாணி ஒரு கர்ப்பிணிப்பெண். அவளின் அங்கம் ஒவ்வொன்றும் காலத்துக்கேற்றகோலம் பூண்டு பார்ப்பவரை மயக்கியது. தன்னுடன் வந்த ஒரு சிறு பையனை அருகில் அமர்த்திக்கொண்டு காலியாக இருந்த சீட் ஒன்றின் மூலையில் அவள் உட்கார்ந்து கொண்டாள்,

அவளின் அசைவு ஒவ்வொன்றையும் இத்தனை நேரமும் ஆவலோடு பார்த்துக்கொண்டு நின்ற கண்டக்டர் டிக்கட் ஒன்றை அவளிடம் நீட்டினன்.

பஸ்ஸில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் ஏறக்குறைய பத்துப் பேரே இருந்தனர். அவர்களும் பஸ்ஸில் தொத்திய அந்தப்பெண்ணைச் சீக்கிரம் மறந்துவிட்டனர். மாட்டுத்தரகு தொடக்கம் மத்திய கிழக்கு நிலைமை வரை பேசித்தீர்க்கப் பிரச்சனைகள் இருக்கும்போது பஸ்ஸிற்குள் ஏறிய பெண்ணெருத்தியில் செலவழிக்க நேரமெங்கே இருக்கப்போகிறது.

கண்டக்டர் அதைத் தெரிந்திருந்தான் போலும். இல்லாவிட்டால் அத்தனைபேரின் மத்தியிலும் அப்படித் துணிவாகச் செய்வானு? காசை வைத்துக்கொண்டு நீட்டிய அந்தப் பெண்ணின் கை விரல்களை டிக்கட் கொடுக்கும் சாக்கில் யாருக்கும் தெரியாமல் சொகுசாக நசுக்கிக் கிள்ளிவிட்டான்!

சின்னப்பையன் ஒருவனைத் தவிர வேறு துணையின்றி வெளியே ஒரு பெண் வெளிக்கிட்டுவிட்டால் வம்பர்களின் கண்களுக்கு அவள் தன்மானமுள்ள பெண்ணுகவே தெரிவதில்லைப்போலும்! காக்கிச்சட்டைபோட்டுக் கொண்டு கண்டக்டர் ஆகிவிட்டால் கயமைத்தனம் போய்விடவா போகிறது?

கையை 'டக்'கென்று இழுத்துக் கொண்டு கண்கள் இரண்டையும் உருட்டி விழித்து அவனை எரித்துவிடுவது

போல அவள் பார்த்தபோது தான் கண்டக்டருக்கு "விஷயம் பிழைந்து விட்டது" என்று புரிந்து கொள்ள முடிந்தது. ஆனுல் தன்கையை அவள் இழுத்துக்கொண்டதாலும் காசைவாங் காமல் அவளின் கைவிரலை நசுக்கு வதில் கண்டக்டர் கவனத்தைச் செலுத் தினதாலும் அவள் கொடுத்த சில்லறைக் காசுகள் கீழே விழுந்து ததி கிணதொம் என்று தாளம் போட்டுக் கொண்டு மூலைக்கொன்ருய் ஓடிமறைந் தன. கண்டக்டரால் பத்தே பத்துச் சதத்தைத்தான் தேடி எடுக்க முடிந் தது. மீதி எல்லாம் பஸ்ஸிற்குள்ளே யே எங்கேயோ அஞ்ஞாதவாசம் செய் தன. கண்டக்டருக்கு என்ன செய் வதென்று புரியவில்லை. அங்குமிங்கு மாய் உட்கார்ந்து எழும்பினுன்; ஆத் திரத்தோடு அவளை அடிக்கடி பார்த் துக் கொண்டான், ஆனுல் பலன் பூஜ்யமேதான்,

'பஸ் சந்தியில் நின்றது. ஒருவரும் இறங்கவில்லை. மூன்று மாணவர்கள் ஏறினுர்கள் மூன்றுபேரும் சர்வகலா சாலை மாணவர்களைப் போல் தோன்றி னுர்கள். அதற்குரிய 'வாடை' அவர் களிடம் அடித்தது. உடைகூட அப் படித்தான்! காலியாகக் கிடந்த ஒரு சீட்டில் மூன்றுபேரும் உட்கார்ந்தனர்.

மூலையில் அந்தப்பெண் முன்சீட்டில் தலையைச் சாயவைத்துக் கொண்டு முனகாத குறையாக இருந்தாள்.

பின்னுல் இருவர் பாஷைப் பிரச் சனையை அலசிக்கொட்டிக்கொண்டிரு ந்தனர், தங்கள் கருத்துக்களைப் பரி மாறிக் கொள்வதைவிட ஏதோ ஒரு பிரசங்கத்துக்கு ஒத்திகை நடத்துப வர்கள்போல் தொண்டை கிழியக் கத் திக் கொண்டிருந்தனர்.

இன்னுமிருவர் வேறு மூலையில் இருந்துகொண்டு பட விமர்சனம் நடத் திக்கொண்டிருந்தனர். அண்மையில் தாங்கள் பார்த்த படத்தின் கதா நாயகியின் கண்வீச்சுத் தொடக்கம் கால் அசைவுவரை பேச்சு வியாபித் திருந்தது. படத்தின் வசனமென்ன, பாட்டுக்கூட கர்ணகடூரமாக ஒப்பிக் பட்டது.

பக்கத்துச் சீட்டில் இருவர் ஏதோ இரகசியமாகப்பேசிக்கொண்டிருந்தனர் 'ஆலயப்பிரவேசம்' 'தீண்டாமை' என் றெல்லாம் இடைக்கிடை அவர்களின் இரகசியப் பேச்சில் அடிபட்டது! பார் த்தால் பேசிக்கொள்வதில்தங்களுக்கே நம்பிக்கையோ எதிர்ப்பைச் சமாளிக் கும் தைரியமோ இல்லாதவர்கள்போல் இருவரும் காணப்பட்டனர்.

முன்னுல் டிரைவருக்கருகில் இருந்த சீட்டில் ஓர் எழுத்தாளர் ஏதோ ஒரு புத்தகத்தில் தன்னையே மறந்திருந்தார்.

சொல்லப்போனுல் பிரயாணிகள் ஒவ்வொருவரும தங்களுக்குப் பிடித்த மான வேலைகளைச் செய்து கொண் டிருந்தனர். தங்களால் மற்றவர்களுக் குக் கஷ்டமோ அல்லது தங்களால் மற்றவர்களின் சுதந்திரம் பாதிக்கப் படுகிறதே என்று சிந்திக்கவோ அல் லது எதிர்த்துப் பேசவோ எவருமே இல்லைஓடும் பஸ் ஒரு சிறிய மீன் மார்க் கட் என்று எல்லோருக்கும் தெரியும் போலும்.

அந்தவேளையில் பஸ்ஸிற்குள் கடைசியாகத் தொத்திய அந்த மூன்று சர்வகலாசாலை மாணவர்களும் தங்களுக்கும் ஏன் அந்தச் சுதந்திரம் இல்லை என்று நினைத்தோ என்னவோ திடீரென்று தாளம் போட்டுப் பாட்டுப் பாடத் தொடங்கினர்.

''வண் ஒக்க்ளொக்! ரு ஒக்க்ளொக்! ரொக்! ரொக்!! என்று இருவர் கத்த மற்றவன் தன் அங்கம் ஒவ்வொன்றையும் அதற்கேற்றவாறு அபிநயம் பிடித்து ஆடினான்.

பார்ப்பதற்கு அழகாகவே இருந்தது பஸ்ஸில் நெருக்கடி இல்லாத வேளையில் காசில்லாமல் அப்படி ஓர் ஆட்டத்தைப் பார்த்து மகிழ்வதில் எவருக்கும் எந்தவிதக் கஷ்டமும் ஏற்படஅவசியமில்லை. ஆனால் உண்மையாக நடந்தது, அதற்கு எதிர்மாறானதுதான் எல்லோரும் சேர்ந்துகொண்டு ஏகோபித்த எதிர்ப்பையே காட்டினர்!

சினிமாவைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்த அந்த இருவர்களிடையே தான் மாணவர்களின் ஆட்டத்தைப் பற்றிய முதல் விமர்சனம் எழுந்தது.

"பாரடா சந்திரபாபு மாதிரி ஆடுறான்!'' என்றான் ஒருவன்.

''போடா! இவங்களெல்லாம் பெரிய பாட்டுக்காறங்கள்! கிடைத்த இடத்தில் எல்லாம் இவங்களை மட்டந்தட்ட வேண்டும்", என்றான் மற்றவன். ஏனோ அவனுக்கு அவர்களில் இனந் தெரியாத ஆத்திரம்! இந்தக் களிசறைகள் இங்கும் வந்து விட்டாங்களா? கோச்சியென்ன பஸ்ஸென்ன இவங்களுடைய சொந்தச் சாமான் என்ற எண்ணம். அண்டைக்கொருநாள்கோச்சியை ஐம்பது தடவை நிறுத்தி விட்டாங்கள். படிக்கிறுங்களாம் படிப்பு! காட்டுமிறுண்டிகள் கூடத் தேவையில்லை''.

ஆலயப்பிரவேசம்-தீண்டாமை பற்றி மெதுவாகப் பேசியவர் இந்த விஷயத்தை மட்டும் கொஞ்சம் சத்தம் போட்டே சொல்லிக்கொண்டார்.

"இவங்கதானும் நாளைக்கு நாட்டை ஆளப்போறுங்களாம்!" அடுத்தவர் அவருடன் ஒத்துப்பாடினார்.

''ஓய்! தம்பிமாரே உதென்ன உங்கட பாட்டன் வீட்டுச் சாமானு உங்கட எண்ணம் போல கத்திவிளையாட? கொஞ்சம் சத்தம்போடாமல் வாருங்க" கொஞ்சம் முந்தி பாஷைப் பிரச்சனையைப்பற்றித் தொண்டை கிழியக் கத்தியவர் திடீரென்று அமைதியின் காவலனுக மாறிவிட்டார்!

அந்தக் கர்ப்பிணிப் பெண்ணோ முன்போலவே முன்சீட்டில் தலையை வைத்துக்கொண்டு சாய்ந்திருந்தாள்!

ஆனுல் முன்சீட்டில் இருந்த எழுத்தாளர் முகத்தைத் திருப்பி மாணவர்களை ஒருகணம் முறைத்துப்பார்த்தார். அடுத்தகணம், ''பெண் புரசுகள் இருக்கும் இடந்தம்பிமாரே இது. வேண்டுமானுல் வெளியே இறங்கி டான்ஸ் போடுங்கோ. இங்கே அதெல்லாம் வைத்துக் கொள்ளவேண்டாம்." என்று கத்திக்கொண்டே கண்டக்டரைப் பார்த்துக் கொண்டார்.

''தம்பிமாரே ஒன்றில் இறங்குங்கள் அல்லது பாட்டை நிறுத்துங்கள்''.

கண்டக்டர் கடுமையான சட்டம் போட்டார்!

ஆனால் ஆட்டமோ பாட்டோ எதுவும் நின்றபாடில்லை, பாட்டுப் படிப்பவர்கள் சாதாரண பள்ளிமாணவர்களா இதற்கெல்லாம் பயப்படுவதற்கு? சர்வகலாசாலை மாணவர்கள் அவர்கள்! எதற்கும் துணிந்தவர்கள்!

"ஹோல்டோன்!" கண்டக்டர் தொண்டை கிழியக் கத்தினன், பஸ் நின்றுவிட்டது. "இறங்குகிறீர்களா இல்லையா?"

"இறங்குகிறீர்களா இல்லையா?"

படித்துக்கொண்டிருந்த எழுத்தாளர் தொட்டு பாஷைப்பிரச்சனை — பிரசங்கிவரை ஏகோபித்து கோரஸ்பாடினர்! ஆனால் மாணவர்கள் இறங்க மறுத்து விட்டனர். அதன்காரணமாய் ஒரே தில்லுமுல்லாய்ப போய்விட்டது ஓர் கணத்தில்!

அந்த வேளையில்தான் எங்கிருந்தோ எழுந்தது நெஞ்சை உருககும் அந்த முனகல் சத்தம்! எல்லோரும் சண்டையை மறந்து திரும்பிப் பார்த்தனர்.

வயிற்றைக் கைகளால் அமத்திக்கொண்டு உயிர்போய் விடுவதுபோல் முனகிக் கொண்டிருந்தாள் அந்தக் கர்ப்பிணிப் பெண்!

எல்லோருக்கும் விஷயம் விளங்கிவிட்டது. பிரசவவேதனையால் அந்தப் பெண் உழறுகிருள் என்று அறிந்த அடுத்தகணமே சண்டை எல்லாவற்றையும் மறந்துவிட்டு 'ஆ' வென்று நின்றனர் அங்குள்ள அத்தனைபேரும்.

"பஸ்ஸை விட்டிறங்கி கார் ஏதாவது பிடித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போவதுதானே."

கண்டக்டரின் இரக்கமில்லாத அந்தப் பேச்சை எவரும் ஆமோதிக்காவிட்டாலும் வேறு ஒரு வழியை யாரும் சொல்லவில்லை.

அவள் இன்னும் முனகினுள். அருகிலிருந்த சின்னப்பையன் செய்வதின்னதென்று தெரியாது விழித்தான்.

"சுறுக்கா இறங்கிக் கொள்ளம்மா! பஸ்ஸை நிறுத்திக்கொண்டிருக்க ஏலாது"

அது கண்டக்டரின் பேச்சு! அவளிடம் முன்பு அவமானபபட்ட ஆத்திரம் இன்னும் அவனுககுப் போகவில்லை.

"கார்பிடிக்க காசுக்கு எங்கேபோவது?

அங்குள்ள அத்தனைபேரினது மனதிலும் எழுந்த கேளவிகள் அவை. ஆனால் யாருமே பதில் அளிக்கவில்லை!

பதில்காண முயன்றவர்கள் அந்த மூன்று மாணவாகள் மட்டுமேதான்!

"அம்மா காசிருக்கா கார்பிடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப்போக?" மாணவனெருவன் அந்தப்பெண்ணைக் கேட்டுக்கொண்டான். அதற்குப் பதிலாக தன்கைக்குள்ளிருந்த ஒரு ரூபா நோட்டை அவள் விரித்துக்காட்டினுள்.

ஆஸ்பத்திரிக்குப் பத்துமைல் போகவேண்டுமே!

"ஆஸ்பத்திரிக்கே பஸ்ஸை ஓட்டினுல் என்ன?" அடுத்த மாணவன் கண்டக்டரைக் கேட்டான்.

"அப்படிச் செய்ய நமக்குச் சட்டமில்லை":

"அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து நசுக்கமட்டும் சட்டம் இருந்ததோ?" என்று அவள் திருப்பிக் கேட்டிருப்பாள் அதைத் தெரிந்திருந்தால்.

"கொஞ்சங் கொஞ்சமாய் எல்லோரும் போட்டு ஒரு கார்பிடித்து அனுப்புவோமே?"என்று கேட்டுக்கொண்டே அங்குள்ளவரிடம் காசு சேர்க்கத்தொடங்கினுன் மூன்ருவது மாணவன். ஆனுல் மூன்று மாணவர்களும் கொடுத்த மூன்று ருபாவைத்தவிர வேறு அவனுல் சேர்க்க முடியவில்லை! எழுத்தாளரிடம் இருபத்தைந்து சதமும் புத்தகமும் மட்டுமேதான் இருந்தன. மற்றவர்களிடம் பணம் இருந்தும் கொடுக்க மனம் இல்லை!

"கலரிக்கு மட்டுமே தான் காசு கொண்டுவந்தோம்" என்று தட்டிக் கழித்தனர் சினிமாப்பிரியர் இருவரும்.

பையைத் தட்டிப்பார்த்து விட்டுக் கையை விரித்தனர் மற்றவர்கள். ஆலயப் பிரவேசமும் பாசைப் பிரச்சனையும் பேச்சில்மட்டும்தானே! பணத்தளவில் இல்லையே!

செய்வதின்ன தென்று தெரியாது மாணவர்கள் திகைக்கும் போதுதான் எங்கிருந்தோ ஒரு கார் வந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட மாணவர்களில் ஒருவன் ஓடிப்போய் அதை நிற்பாட்டினுன். கார் ஓட்டியவர் ஒரு துரை. அவரிடம் எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் விளக்கினுன் மாணவன்.

அதற்குள் காரின் கதவைத் திறந்து விட்டான் இன்னெருவன் பெண்ணை அழைத்துக் கொண்டு போய் இருத்தி விட்டான் மூன்ருவது மாணவன்.

கார் சொந்தக்காரர் கொஞ்சமும் கடுக்டுக்கவில்லை. துணைக்கு ஒரு மாணவன் முன்சீட்டில் தொத்திக் கொண்டானே! அடுத்தகணம் கார் ஆஸ்பத்திரியை நோக்கி அசுரவேகத்தில் பறந்தது.

பஸ் மீண்டும் நகரத்தொடங்கியது.

"நெஞ்சு பொறுக்குதில்லை! இந்த நிலைகெட்ட மனிதர்களை நினைந்துவிட்டால்!" என்று வேடிக்கையாகப் பாடினுல் முதலாவது மாணவன். அங்குமிங்கும் கையை ஆட்டி அபிநயம் பிடித்து ஆடினுன் இரண்டாவது மாணவன்.

எல்லோரும் மௌனமாக இருந்தனர்! எதிர்த்துப்பேச இப்போ அங்கே எவருமே இல்லை!

பஸ் ஓடிக்கொண்டிருந்தது!

'**கலைச்செல்வி**'யில் *விளம்பரம் செய்பவர்களை ஆதரியுங்கள்.*
*கடிதம் எழுதும்போது* '**கலைச்செல்வி**' *பற்றிக் குறிப்பிடுங்கள்.*

*இளங் கவிஞர், மகாலிங்கம், மட்டக்களப்பு திமிலைதீவைச் சேர்ந்தவர். எஸ். தங்கவேல் என்ற சொந்தப் பெயரில் கதைகளும், 'மகம்' என்ற பெயரில் கட்டுரைகளும் எழுதிவருகின்றார்.*

# வாழ்க காந்தி

— **திமிலை, மகாலிங்கம்** —

தாயின் அடிமைத் தளைபோக்கித்
தனியோ ரரசு நிலையாக்க
"மாயின் சரியே யுயிர்விடுவேன்
வாரீ" ரென்றே போர்சென்றான்.
காயமிதுவே சுதந்திரத்தைக்
காணுங் காணுமென வுழைத்தே
ஆயவேலை மேற்கொண்டே
அடைந்தார் வெற்றி அன்பாலே!

துள்ளி வெடிக்குந் துப்பாக்கி
துளைக்குங் குண்டு துணைகொண்டே
வெள்ளைக் காரர் எதிர்த்திடவே
"விலகு நாட்டை விடு"என்றார்
பள்ளி செலலும் சிறுவர்முதல்
பாரைவெறுக்கும் பாட்டானுக்கும்
அள்ளிச் சொரிந்தார் சுதந்திரத்தின்
ஆசை வளர்த்தார் அன்பாலே!

சத்திய நெறியைக் கையேந்தி
சாந்தம் பொறுமை உளமேந்தி
மத்தகமன்ன வடிமையினை
வதைத்தே வென்றார் மாகாந்தி
நித்திய சேவை மேற்கொண்டே
நிலையாம் பயனை யணுகிவிடும்
சத்தியாக் கிரகவழி கண்டார்
சகமே போற்றும் நிலைகொண்டார்.

## வளரும் எழுத்தாளர் பகுதி :

*'உறுதி பிறந்தது'டன் எழுத்துலகில் அடியெடுத்து வைக்கும் உமா மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவி. இலக்கியத்துடன், இசை, நடனம் ஆகியவற்றிலும் ஆர்வமுடையவர்.*

# உறுதி பிறந்தது!

உமா

மூர்த்திஇப்பொழுது அடியோடு வேறு மனிதனாகிவிட்டான். யாழ்ப்பாணத்தில் அவனோடு சேர்ந்து படித்த மாணவர்களிடம் "இவன்தான் அந்தப் பயந்தாங்கொள்ளி" என்றால், கட்டாயமாக நம்ப மறுப்பார்கள். ஒரு நாளைக்குக் குறைந்தது காலையும் மாலையும் அரைமணி நேரமாவது பூஜையிற் செலவழிப்பவன் இப்பொழுது பூஜையறை இருக்கும் திக்கையே திரும்பிப் பார்ப்பதில்லை. பூஜையில் வீணாக்கும் பொன்னான நேரத்தை கண்ணாடிக்கு முன் பிரயோசனப்படுத்தினாற் கொஞ்சம் நாகரிகமாயாவது இருக்கும் என்று கருதினானோ என்னவோ?

மைந்தனுடைய போக்கு மரகதத்திற்குக் கட்டோடு பிடிக்கவில்லை. 'கிராமத்தை விட்டுக் கொழும்பிற்கு வந்து ஒரு மாதமாவதற்குள் இத்தனை மாறுதலா?" என்று அந்தப் பேதை மனம் நோகத்தான் செய்தது. "தகப்பனைப்போற்தான் பிள்ளையும் ......"

இதை எண்ணியதும் அவள் விழியோரத்திலே இரண்டு சொட்டுக் கண்ணீர் துளித்தது.

மூர்த்தி சிறு வயதிலேயே தகப்பனை இழந்தவன். மூர்த்தியுடைய தாய் மரகதம், செல்வமாகப் பிறந்து, செல்வமாக வளர்ந்து, நிறைந்த செல்வத்துடனேயே விவாகமானவள். ஆனால் அவள் கணவன் கந்தசாமி ஒரு குடிகாரன். மாட்டுக்கு நாணயம் குத்துவதுபோல் இவனுக்கும் கல்யாணம் செய்து வைத்தால் நல்லபடி ஒழுங்காக இருப்பான் என்றெண்ணியே, அவன் ஒரு வியாபாரி என்று மரகதத்தின் பெற்றோரையும் ஏமாற்றித் திருமணத்தை முடித்து வைத்தனர் அவன் உறவினர்.

மரகதம் தன் கணவனின் போக்கை மாற்ற எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இரவில் நேரம் பிந்தியேவீடு வந்து சேர்வான். அவன் வரும் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் மரகதத்திற்கு அவன் வந்தவுடன் அளிக்கும் பரிசு அடியும் உதையுந்தான்!

ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி யாகியும் கந்தசாமி வரவில்லை. அப் பொழுது மூர்த்திக்கு வயது ஒன்று. மூர்த்தியை மடியில் வைத்துக்கொண்டு வாசற்படியிற்காவலிருந்தாள். எங்கோ இருந்து வந்தவன், வந்ததும் வராதது மாக, "ஏய் எனக்குக் காசு ஐம்பது ரூபாய் வேணும். கொண்டு வா கெதியில்" என்றான் அதிகாரத்துடன். முதல் நாள் வீட்டிலிருந்து வந்த ஐம்பது ரூபாவும் அவன் கண்ணில் எப்படியோ பட்டுவிட்டது. என்று சட்டெனப் புரிந்துவிட்டது அவளுக்கு. என்றாலும் சமாளித்துக் கொண்டு, "ஏன் எங்கேயாவது போக வேண்டுமோ? என்றாள்.

அவன், அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் உள்ளே சென்றுவிட்டான்! அவள் மீண்டும், "இந்த நேரத்தில் இப்படித்திரிந்தால் கண்டவர்கள் என்னதான் சொல்லு வார்கள்? இப்பொழுது பேசாமற் சாப்பிட்டு விட்டுத் தூங்குங்கள். பொழுது விடியட்டுமே! என்றாள், அன்பும் பயமும் கலந்திருந்தது அவள் குரலில்.

"என்னடி உளறுகிறாய்? நான் பணம் கேட்கிறேன். நீ உன்பாட்டுக்கு அலட்டுகிறாயே சனியன்..........நல்ல காரியத்திற்கென்று பணம் கேட்கி றேன்......தருகிறாயா.....இல்லை......" பேச்சை முடிக்காமலே அவள் கூந் தலைப் பற்றினான் அவன்.

ஓரளவிற்கு மனதைத்திடப்படுத்திக் கொண்டு, தருவேன் ......... ஆனால் இப்போ தரமுடியாது" என்று சொன் னாள்.

அவனுடைய கோபம் எல்லையை மீறிவிட்டது.

"என்ன......எதிர்த்துப் பேசவும் துணிந்து விட்டாயா? என்றபடி மடி யிலிருந்த குழந்தையையும் உதைத்து விட்டு ஆத்திரம் தீரும் வரைக்கும் அவளை அடித்தான். அவள் அழுதாள்; குழந்தை கதறியது. ஆனால் அவர்களைக் கவனியாது அவன் போய்விட்டான். விதியை நொந்து, விழிகளைக் குளமாக் கிய அவளுக்கு அந்தச் சேதியை யாரோ அறிவித்தார்கள்: குடிபோதை யில் வெளியே சென்ற கந்தசாமி லொறி விபத்திற் சிக்கி இறந்து விட்டா னாம்.

மரகதம் "கோ" என்று கதறினாள் நிலத்தில் விழுந்து புரண்டாள். குழந்தையைக் கட்டிக் கொண்டு கதறினாள். கந்தசாமி கெட்டவனென் றாலும் அவன் கணவனல்லவா?

நாட்கள் சென்றன குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பார்த்துத் தன் சோகத்தை ஆற்றிக் கொண்டாள். அவனையாவது நல்லவனாக வளர்த்து விட வேண்டுமென்று தீர்மானித்தாள்.

திரும்பவும் பெற்றோரிடம் செல்ல அவள் மனம் சிறிதும் இடம் கொடுக் கவில்லை எனவே, மிஞ்சி இருக்கும் காணிகளில் இருந்துவரும் வருமானத் தைக்கொண்டு மூர்த்தியைப்படிப்பிக்க எண்ணினாள்.

எந்தநேரமும் பூஜையும் தியானமு மாகத்தான் இருப்பாள். இதனால் தகப் பன் இல்லாதபிள்ளை என்ற படியால் அவனைக் கண்டிப்பான முறையில் வளர்த்து வந்தாள். எந்த நேரமும்

புத்தகமும் கையுமாக இருப்பான் மூர்த்தி. இதனால் அவனுக்குப் "புத்தகப்பூச்சி" என்ற பட்டம் ஏற்பட்டது. எதற்கெடுத்தாலும் "அம்மா என்ன சொல்லுவாளோ?" என்றுதான் சொல்லுவான். இதைக்கண்ட நண்பர்கள் "பயந்தாங்கொள்ளி" "அம்மாபிள்ளை" என்ற பட்டங்களைத் தாராளமாக அளித்தனர். "ஏது? மூர்த்து இன்னும் இரண்டு வருடங்களுக்குள் மொட்டைதட்டிக் காவியும் உடுத்து சந்நியாசமும் பெற்றுவிடுவான் போலிருக்கே!" என்று சில குறும்புக்காரர் கேலிபண்ணுவதும் உண்டு.

எஸ். எஸ். சி பாஸ்பண்ணிய பின் அவனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. ஒருமாதிரி ஒரு கிளார்க் வேலை கிடைத்தது. "அம்மாபிள்ளை" யால் கொழும்பில் எப்படித் தனியாகக் காலம் கழிக்க முடியும்? ஒரு சிறு வீட்டை வாடகைக்கமர்த்திக் கொண்டு தாயையும் கூட்டிக்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தான்.

வந்து ஒருவாரத்திற்கு அவனிடம் ஒரு மாறுதலும் காணப்படவில்லை. "ஏன் இவன் மற்றவர்களைப்போலில்லாமல் இப்படி இருக்கிறான்? என்று எண்ணுவாள் மரகதம். இந்த எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது போல, அடுத்த வாரமே அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டது.

ஒருநாள் காலை வழக்கம் போற் போனவன் பின்னேரம் மீசையும், பெல்டுமாகத் தாய்க்கு முன் வந்து நின்றான்.

இதென்னடா வேஷம் சினிமாவில் வரும் வில்லனைப் போல்?" என்றாள் தாய்.

"வேஷமுமில்லை வெங்காயமுமில்லை இதுதான் இப்போதைய பாஷன் நானும் விடாமற் பிடித்து விட்டேன்" என்றான் விறைப்பாக. அவன் பேச்சிலும் மாற்றத்தைக் கண்டு துணுக்குற்றாள் தாய். "கெட்டித்தனந்தானென்" மகன் என்று முணுமுணுத்தாள் அவள்.

ஐந்து மணியளவில் அவன் "பிரண்ட்ஸ்" நாலுபேர் வந்து அவனை வெளியே செல்ல அழைத்தனர். பழைய பழக்கத்தினால் தாயின் முகத்தைப் பார்த்தான் அவன்.

"என்ன மூர்த்தி! இப்படிக் கட்டுப் பெட்டியாக இருந்து என்ன செய்யப் போகிறாய்? வெளியில் நாலுபேருடன் "மூவ்" பண்ணத் தெரிய வேண்டாமா? என்றான் ஒருவன்.

"சரி போய் வா" என்றாள் மரகதம் அரைமனத்துடன். மற்றவர்களுக்கெதிரில் ஒன்றும் பேச வேண்டாமே என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னாளே தவிர, பின்புதான் "ஏன் இவர்களுடன் விட்டேன்"? என்றிருந்தது அவளுக்கு.

மூர்த்தியை அழைத்துக் கொண்டு காலி முகக்கரைக்குச் சென்றார்கள். அங்கு வந்து போகும் நாகரீகமணிகளை பார்ப்பதும், அவர்களைப் பற்றிப்பேசிச் சிரிப்பதும், பார்த்துப் பல்லிளிப்பதும் சீ...! இவையெல்லாம் மூர்த்திக்குப் பிடிக்கவில்லை. "திரு திரு' என்று விழித்துக் கொண்டிருந்த மூர்த்தியைப்

பார்த்து "எல்லாம் போகப்போகச் சரியாகி விடும்" என்று சமாதானம் கூறினர்கள் மற்றவர்கள்.

கூட்டம் கலைந்தவுடன் நேராக ஒரு குடிவகை விற்கும் கடைக்குட் சென்றனர். பரிமாறப்பட்ட வஸ்துவின் நெடி அவனை நரகவேதனைக்குள்ளாக்கியது. மற்றவர்கள் உசாராகக்குடித்தார்கள். இடித்த புளி மாதிரி இருந்த மூர்த்தியைப் பார்த்து "என்னடா பிடித்த பிள்ளையார் மாதிரி இருக்கிருய் எடுத்துக் குடி....ம்..." என்று தொந்தரவு செய்தான் ஒருவன்.

இல்லை...... வேண்டாம் ...... நான் சோடா குடித்துக் கொள்ளுகிறேன். என்ருன் சங்கடத்துடன், மூர்த்தி.

"நாய் வேஷம் போட்டாற் குரைக்கத்தான் வேண்டும். இங்கு வந்தாகி விட்டது. இனிக்குடிக்கத்தான் வேண்டும்" குழந்தைகளை மிரட்டுவதுபோல் மிரட்டிவிட்டு கிளாசைத் தூக்கி அவனுக்குப் பருக்கப்போனன் ஒருவன். வேண்டா வேறுப்பாக மூச்சைப் பிடித்துக் கொண்டு குடித்து விட்டான் மூர்த்தி. அன்றைய "பில்" அவன் தலையில் விழுந்தது! குடித்தாகி விட்டது. இப்படியே அம்மாவின் முகத்தில் எப்படி விழிப்பது? சுற்றித் திரிந்து விட்டுப் பத்துமணியளவில் வீடு வந்து சேர்ந்தான். தன் மகனும் தகப்பனைப் பின்பற்றப் போகிருன் என்று எங்கே கண்டாள் அந்தத்தாய்?

"ஏன் இவ்வளவு நேரம் மூர்த்தி"?

"அதுவா... வந்து... படம் பார்க்க போயிருந்தேன்". சத்தியமூர்த்தி தன் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி விட்டான். அடுத்த நாள் அவன்மனமே அவனைக் குத்திக்காட்டியது. எப்படித் தெண்டித்தாலும் குடிப்பதில்லை என்ற உறுதியுடன் தான் போனுன். ஆனல் அங்கு போனவுடன் நெஞ்சில் உறுதி எல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டது. முதல் நாட் போலவே நடந்தது. மூன்ரும் நாளும் அப்படித்தான். நாலாம் நாள். அவன் மனம் இப்போது நன்ருகப் பழக்கப்பட்டு விட்டது.

"ஏதோ களைத்த உடம்பு உசாராக இருக்குமே என்றுதானே குடிக்கிறேன், கொஞ்சம் குடிப்பது உடம்பிற்கு நல்லதென்று எல்லோரும் சொல்லுகிருர்களே" என்று சமாதானப்படுத்தினுன் இப்படி எத்தனையோ நாட்கள் கழிந்து விட்டன.

அன்று அவன் சம்பள நாள்,

நாலு மணிக்கே வீட்டிற்கு வந்து விட்டான், காசையெடுத்து "இந்தா செலவுக்கு" என்று அலட்சியமாக வீசினுன் தாயிடம். போன முறை சம்பளம் முழுவதையும் அப்படியே தாயிடம் கொடுத்து விட்டுத் தான் அவளிடமிருந்தே பெற்று வந்த அவன், இம்முறை வேலைக்காரியிடம் செலவிற்குக் கொடுக்கும் எசமானைப்போற் கணக்காகக் கொடுத்திருந்தான். அவள் ஒன்றும் பேசவில்லை. பொறுத்துக் கொண்டாள்.

நண்பர்களுடன் வெளியே போனுன் மூர்த்தி. அன்று அவர்களுடைய புனித நாளாகையால் பலமாகக் குடித்தார்கள். மூர்த்தியாற் தாங்க முடியவில்லை. ஆட்டம் கண்டது. எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்து

வீட வேண்டுமென்றிருந்தது. தாய்க்குத் தெரியாமற் சிகரட் பிடிப்பவன் அன்று வாயில் சிகரட்டுடனேயே வீட்டுக்குள் நுழைந்தான்.

அவனுடைய சிகரட் புகை அவளைச் சித்திரவதை பண்ணியது. அன்று தான் மகனிடம் உள்ள மாறுதல்களை யும் கண்டாள் அவள். இவ்வளவு கண்டிப்புடன் தான் வளர்த்த மகன் இந்த மோசமான நிலைக்கு வரக்கூடும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

மகன் என்ற முறையிற் தனது வெறுப்பையும் காட்டாது பொறுத் திருந்த தாய் இனிப்பொறுக்கவே மாட்டாள்! பொறுக்கவும் முடியாது!! "ஏய் உன்னை இந்தநிலையிற் காணவா இவ்வளவு கஷ்டப்பட்டேன்." என்ருள் தாய் எரிச்சலுடன். "பட்டிக் காட்டில் இருந்த உனக்கு எங்கே தெரியப்போகிறது இந்தப் பட்டணத்து நாகரீகம்" என்ருன் ஏளனமாக.

அதையும் பொருட்படுத்தாமல் 'நீ இதையே சொல்வதாயிருந்தால் சொல் லு, இப்பவே வெளியேறி விடுகின் றேன்" என்று சுற்றி வளைக்காமல் நேராக விஷயத்தில் இறங்கினுள் அவள்.

"நீ இல்லையென்று யார் கவலைப்பட் டார்கள்? தாராளமாகப் போகலாம், குட் பை" என்று கையை ஆட்டிய படி அவனே வெளியே சென்றுவிட் டான்.

மரகதம் விறைத்துப்போய் அப்படி யே இருந்துவிட்டாள். "என் மகனு? இவன்" என்று எண்ணிக் குலுங்கக் குலுங்க அழுதாள். அன்று அவள் பட்ட வேதனை, அவளுடைய கண வன் இறந்தபோதுகூடப் படவில்லை. இருண்டு வெகுநேரமாகியும் விளக்கு ஏற்றுமலேயே இருந்துவிட்டாள். அந்த வீடு அவள் வாழ்வைப் படம் பிடித் துக் காட்டுவதுபோலிருந்தது.

ஒருதரம், "சிறுபிள்ளைதானே மன் னித்துவிடலாம்!" என்றெண்ணினுள். உடனேயே அவள் தம்பியின் முகம் தோன்றி, "என்னக்கா மன்னித்து விடவாபோகிருய்? உன் மகனென்ற படியால் மன்னிப்பாய். ஆனுல்அன்று என்னை ......அந்த இரவிலேயே வீட் டைவிட்டுத் துரத்தினுயே! அவன் செய்த குற்றத்தைத்தானே நானும் செய்தேன்? அந்தக் குற்றத்தை மன் னிக்கலாமென்ருல், என்னை ஏன் மன் னிக்கவில்லை? ஏன்...? ஏன்?"

அப்பொழுது மூர்த்திக்கு வயது பதினுறு. அவளுடைய தம்பி ஊரிலி ருந்து வந்திருந்தான், அக்காவுடன் கொஞ்சநாளிருந்து விட்டுப் போவதற் காக. ஆனுல் இரண்டு நாளுக்குள் ளேயே அவனை விட்டகற்றி விட்டாள் மரகதம். அவன் குடிப்பதும் சிகரட் புகைப்பதும், அவளுக்குப் பிடிக்க வில்லை. மூர்த்தியும் அவனைப்பார்த்து பழகிவிட்டால்...? பழுதாகிற வயது தானே! இதனுல், ஒருநாள் இரவு குடித்துவிட்டு வந்த அவள் தம்பியை அப்பொழுதே கலைத்து விட்டாள்.

ஆனுல் இப்பொழுது.......?

அந்தக்குடிகாரனுடன்வாழ்ந்த அவள் கண்டறிந்த உண்மைகள் இவைதான். "குடிக்கத்தொடங்கியவர்களை ஒருவ ராலும் நிறுத்த முடியாது அவர்களுக்

குக் குடியின்மேலுள்ள மோகம் வளருமேயல்லாது தேயாது; இதற்கு அவள் மகன் மாத்திரம் விதிவிலக்கா?

இனி அவனைத்திருத்தவும் முடியாது! அவனோடு அவளால் வாழவும் முடியாது. அப்படியானால் இனி என்ன செய்யலாம? நீண்ட நேரம் சிந்தனைக்குப் பின் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு கடதாசி எடுத்து எழுதினாள்.

"மூர்த்திக்கு"

உன்னை என் மகன் என்று நினைக்கவே வெட்கமாக இருக்கிறது. போகட்டும். முன் பொருநாள் நடநத சம்பவம் உனக்கு நினைவாக இருக்குமென்று நினைக்கிறேன். அதுதான் உன் மாமாவை, இல்லை என் தம்பியை வீட்டை விட்டு விரட்டிய சம்பவம். என் தம்பி என்று பாராது கலைத்தேன். எதற்காக? "எங்கே நீயும் அவனைப் பார்த்துக் கெட்டு விடுவாயோ என்ற பயத்தினாற்தான். நான் பயந்ததும் சரியாகிவிட்டது.

இனி உன்னைத்திருத்த முடியாது; மன்னிக்க முடியாது; உன்னோடு இருக்கவும் முடியாது. நான் போகிறேன்.

மரகதம்.

அளவுக்கு மீறிக் குடித்துவிட்டு இரவு முழுவதும் ஊர்சுற்றித் திரிந்த படியால் ஏற்பட்ட அசாதாரண வயிற்று வலியுடன் வீடு வந்து சேர்ந்தான் மூர்த்தி. அவனை வண்டியிலேற்றி வீட்டிற்கு அனுப்பக்கூட முடியவில்லை அவனுடைய நண்பர்களால்.

வலியினாற் கஷ்டப்பட்ட அப்போது தான் அம்மாவின் அருமையை அவனால் உணர முடிந்தது. ஆனால் அவனைத் திறந்த வீடும் விரிந்த கடிதமுந்தான் வரவேற்றன. கடிதத்தைப் படித்தான். அவனால் அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. அப்படியே கதிரை ஒன்றில் சாய்ந்தான். வலியெல்லாம் மறந்து விட்டது. தன் நடத்தையைப் பற்றி அப்போதுதான் சிறிது சிந்தித்தான். எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் வளர்த்து ஆளாக்கிய அருமைத்தாய்க்கு என்னதான் நன்மை செய்யாவிட்டாலும் உள்ளத்தைப் புண்படுத்தாமலாவது இருக்கலாமல்லவா?

இரண்டு மூன்று நாட்களுக்கு "லீவு" தருமபடி அதிகாரிககு எழுதிவிட்டுத் தாயைததேடிப் புறபபட்டான். மறுபடியும அவனை அழைத்துக் கொண்டு போக நணபர்கள் சிலா வந்தனர்.

சிறு வயதிற் படித்து மறந்த குறள் ஒன்று அவன் நினைவிற்கு வந்தது.

"நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகுமாநதர்க்

கினத்தியல் பதாகு மறிவு"

"இதுவும் என்னைப் போன்ற பத்தாம் பசலிகளைப் பார்த்துத்தான் திருவள்ளுவர் எழுதினார்" என்று நினைத்தான். "மூர்த்தி, மூர்த்தி" என்று அழைத்தனர் நண்பர்கள். "வர முடியாது போய் விடுங்கள்" என்று உறுமினான் மூர்த்தி. அவனை இனி ஒரு அணுவாலும் அசைக்க முடியாது. ஆம் இப்பொழுதுதான் அவனுக்கு உண்மையான உறுதி பிறந்தது!

# இரத்தினம்ஸ்

## புதிய புடவை மாளிகை

அரிவையர் ஆடவர் அனைவர்க்குமேற்ற

அழகான ஆடைகள் அன்புடன் அளிப்போம்.

**விலை குறைவு — தரம் உயர்வு**

**ஒரு முறை வருக!**

**உண்மையை உணர்க.**

பனரஸ், மணிப்புரி, பங்களூர் பட்டு,

பலவித வர்ண ஜோர்ஜட் நைலோன்

---

தீபாவலித் தேவைகட்கு எம்மிடம் தெரிவு செய்க.

---

அழகான கைக்கடிகாரங்களும் கிடைக்கும்.

# இரத்தினம்ஸ்

180, கே. கே. எஸ். ரேட்

**யாழ்ப்பாணம்.**

# கண்டதும் கேட்டதும்

யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் சம்பந்தன் அவர்களது தலைமையில் பாரதி விழாவைச் சென்ற மாதம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடந்த இவ்விழாவில், வித்துவான் திரு. க. வேந்தனார். திரு. மு. வைரமுத்து C. C. S., செல்வி கேஸ்வரி சரவணமுத்து, திருமதி பத்மா சோமகாந்தன், வித்துவான் திரு. பொன். முத்துக்குமாரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழாவில் ஏற்பாடு செய்யப்பட்ட கவியரங்கத்தில் கவிஞர்கள் முருகையன். அம்பி, வல்லிபுரம், நாவேந்தன், நாகராஜன் ஆகியோர் பங்கு பற்றினர். இலங்கை வானொலியில் தங்கப் பதக்கம் பெற்ற கவிஞர் செல்லையா அவர்கட்கு அன்று பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. திரு. கனக செந்திநாதன் கவிஞரைப் பாராட்டிப் பேசினார்.

திருநெல்வேலி கலாலய மாணவர்களின் அரங்கேற்றம் 27—9—58 சனிக்கிழமை இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. கலாலய ஆசிரியர்களான திரு. ஐயாக்கண்ணு தேசிகர் (வாய்ப்பாட்டு), திரு. சோமாஸ்கந்த சர்மா (வயலின்), திரு. வீரமணி (நடனம்). திரு. ராமன் (மிருதங்கம்) ஆகியோரது திறமையில் மாணவ மாணவிகள் பிரகாசிப்பதை அன்று அனைவரும் அறியக்கூடியதா யிருந்தது. அதே மேடையில் நடைபெற்ற பிரபல நாட்டிய ஆசிரியரான திரு. சுப்பையா அவர்களின் சிஷ்யை செல்வி சாந்தா இளையதம்பியின் பரதநாட்டியம் யாவரையும் கவர்ந்தது. அரங்கேற்ற விழாவை வெற்றிகரமாக நடாத்திவைத்த திரு. மயில். சண்முகலிங்கம் பாராட்டிற்குரியவர்.

யாழ் சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் வித்துவான் சு. சத்தியலிங்கம் அவர்களின் கச்சேரியொன்று 28—9—58 ஞாயிறன்று தி. இ. வா. சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கீத

ரசிகர்கள் பெருமளவில் திரண்டு வந்திருந்தார்கள். இயற்கையாகவே ஒலிபெருக்கிக்கு ஏற்ற குரலையுடையவர் திரு. சத்தியலிங்கம்: அன்னாரின் திறமை அன்று பக்கவாத்தியம் வாசித்த T. V. பிச்சையப்பா (வயலின்), A. S இராமன் (மிருதங்கம்) P.S. ஆறுமுகம்பிள்ளை (கடம்) சந்தான கிருஷ்ணன் (கஞ்சிரா) ஆகியோரின் ஒத்துழைப்பினால் மேலும் சோபித்தது.

யாழ். த. எ. சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 4–10–58 சனிக்கிழமை பாரதி பாஷிய வித்தியாசாலையில் சம்பந்தன் அவர்களது தலைமையில் நடைபெற்றது, "தமிழில் நல்ல சில சிறுகதைகள்" என்பது பற்றி திரு. சி. சரவணபவன பேசினார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் திருவாளர்கள் கே. டானியேல், கனக செந்திநாதன் டொமினிக் ஜீவா, இ. நாகராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(கலை, இலக்கிய நிகழ்ச்சிகள்பற்றிய அறிவித்தல்களை ஆசிரியர்க்கு அனுப்புக.)

---


## ராக்ஸி பிடியுங்கள்!

# மைலுக்கு 60 சதம்

- நிதானமான சலார்–நீங்கள் கொடுப்பது மீட்டர் காட்டுவதையே!
- வாக்குவாதம் வேண்டாம்–மீட்டரைக் கவனியுங்கள்.
- குறைந்த செலவில் வசதியான பிரயாணம்.
- பண்வு, உற்சாகம், நேர்மையுள்ள சாரதிகள்,
- பிரயாணிகள் 'இன்சூர்' செய்யப்பட்டுள்ளனர்.
- முக்கியமான இடங்களில் பிடிக்கலாம்.


(டெலிபோன் இலக்கம் பின்னர் அறிவிக்கப்படும்)

விபரங்களுக்கு:—

## யாழ்ரதம் ராக்ஸி லிமிடெட்,

மின்சாரநிலைய வீதி, : யாழ்ப்பாணம்.

# பெரியோர் கேண்மை



## உயர் திரு அண்ணாமலை அவர்கள்

தயாரிப்பு: சி. பொன்னம்பலம்.

வைத்தியத்திறமையினாலும், இனியசுபாவத்தினாலும் தன்னலமற்ற சேவையினாலும் ஈழத்தமிழர்களின் இதயங்களில் இடம் பெற்றிருப்பவர் வைத்திய கலாநிதி உயர் திரு அண்ணாமலை அவர்கள், "என்கடன் பணிசெய்து கிடப்பதே" "கீழோராயினும் தாழ உரை" என்ற மூதுரைகளுக்கு இலக்கியமாய் சுதுமலையிலிருந்து தன் வைத்தியப் பணியைச் செய்து வருகின்றார். காசைப்பற்றிக் கவலைப்படாமல், சொந்தக் காணிகளையே விற்று, கஷ்டப்படும் நோயாளிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார்.

நாட்டிற்கு ஒரு நல்ல வழிகாட்டியாகத் திகழும் இப் பெரியோர்க்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நமது வாசகர்களுக்கு அன்னாரின் அறிவமுதத்தை அளிக்கின்றோம்.

ஆ - ர்

**சுகாதாரப் பரிசோதகர்களும் சுகாதார வசதிகளும் நிறைந்த இந்நாளிலே தொற்று நோய்கள் பரவக் காரணம் என்ன ?**

நோய்கள் பரவுதற்கு இயற்கையின் நியதியும் ஒரு காரணம். காலச் சுழற்சியிலே சுவாத்திய மாறுபாடுகள் பூமியில் ஏற்படுகின்றன. அந்த மாறுபாடுகள் காரணமாகச் சிலருடைய உடம்பிலுள்ள அணுக்களிலேவேற்றுமை தோற்றுகின்றது. அதே அணு அமைப்புடைய சரீரங்களிலே ஒரேவகையான வியாதி பரவக் காணலாம். உதாரணமாக 1945 – 1950 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இலங்கையிலே வளர்ந்தவர்களுக்குச் செங்கமாரி நோயும் (செங்கமாரி) சிறுவர்களுக்குக் கழிச்சல் வியாதியும் ஏற்பட்டுப் பரவியது. இது சுவாத்திய பரிணமிப்பால் நிகழ்வதென்றே சொல்லவேண்டும். இதுபோலவே இன்புளுஎன்சா என்ற சலதோஷக் காச்சலும், நெருப்புக்காச்சல், நியூமோனியா என்பனவும் பரவுகின்றன. ஆனால் சுகாதார வசதிகளால் நன்மை நடந்து கொண்டேயிருக்கின்றது.

**இரத்தக் கொதிப்பு வியாதி ஏற்படக் காரணம் என்ன ?**

அளவுக்கு மிஞ்சி ஆகாரம் உண்பதும போதிய சரீர அப்பியாசம் இல்லாமையும் பிரதான காரணங்கள், உணவு இச்சை கொண்டோர் அளவுகடந்து உணவை உண்பதாலும் கால வரையறை இன்றி உண்பதாலும் உறுதியான சதைகள் வைக்காமல் ஊத்தைச் சடலம் பெருக்கின்றது. அதனோடு உடற் பயிற்சியுமில்லாதிருந்தால் பெருத்த இறுக்கமற்ற சரீரத்திற்கு இரத்தாசயத்திலிருந்து இரத்தம் அனுப்பும் வேலை அதிகரித்திருக்கிறது. இந்த அளவுக்கு மிஞ்சிய வேலையை இரத்தாசயம் செய்ய முடியாமல்சக்தியற்றுப்போகும். அது சமயம் இரத்தாசயத் துடிப்பு அதிக வேகமடையும், அல்லது குறைவடையும். கூடிய துடிப்பு,

குறைந்த துடிப்பு இரண்டும் இரத்தாசயத்தின் பலவீனத் தைக் காட்டுவனவாகும்.

தமிழ் வைத்தியத்திலே, வாத தேகிகளுக்கு இந்தக் கொதிப்பு வியாதி வாயு சம்பந்தமாக ஏற் படுகின்றது என்றும் அதனால் வாத சம்பந்தமான நோய்கள் வருவதாயும் சொல்லப்படுகின் றது. பித்த தேகிகளுக்குப் பித்த சம்பந்தமான பாண்டு நோய், மூல வியாதிகள் ஆதி யன ஏற்படும் என்றும் சொல் லப்படுகிறது.

**இரத்தக் கொதிப்பு வியாதி உள்ளவர்களில் அநேகர் சல ரோகத் தினாலும் வருந்துகிறார் கள். இரண்டிற்கும் சம்பந்த முண்டா ?**

இரண்டுக்கும் நேரடியான சம்பந்தமில்லை, சலரோகி களுக்கு இரத்தக் கொதிப்பும், இரத்தக் கொதிப்பு நோயுள்ள வர்களுக்குச் சலரோகமும் தேக நிலைகளைப் பொறுத்து ஏற்படும்.

**சலரோகத்திற்குத் தமிழ் வைத்திய வழியில் நிவர்த்தி மருந்துகளுண்டா ? ஆங்கில வைத்திய முறையில் கையா ளப்படும் " இன்சுலின் " ஊசி மருந்தினால் மாற்றிவிடலாமா?**

" இன்சுலின் " உடனுக்கு டன் மாற்றத்தைக் கொடுத்துத் திரும்பவும்வியாதி நிலைக்கத்தான் செய்யும். தமிழ் வைத்திய முறையில் வியாதியை மாற்றச் சில பஸ்பங்கள் இருக்கின்றன, அவற்றிற்கு, அப்பிரகம் என்ற படிக வர்க்கத்தைச் சார்ந்த பொருளும், கோமூத்திரசலாத் என்ற பொருளும் பிரதானமா கச் சேர்க்கப்படுகின்றன. இம் மருந்துத் தயாரிப்பில் சிரமமும் செலவும் மிகுதியாகவுண்டு. ஆங்கில மருந்து ' இன்சுலினால் ' ஏற்படுவதிலும் பார்க்க அதிக பெறுபேற்றைஎதிர்பார்க்கலாம்.

சலரோகத்திற்கு 'இன்சுலின்' கொடுக்கும் உதவியைப்போல, நாவல்விதை, கடல்ருஞ்சிப்பட் டை இவற்றைச் சேர்த்து அவித்துப் தினமும் காலை மாலை தேநீருக்குப் பதிலாகப் பால் சேர்த்துப் பருகிவர வியாதிகள் ஓரளவு குணமடையும்.

**ஆங்கில வைத்தியத்தில், பாம்பின் விஷம்போன்றநஞ்சுத் தன்மைகளை ஊசி மூலம் நரம் புகளுக் கேற்றி சில நோய்களை மாற்றுகிறார்கள். தமிழ் வைத் திய முறையிலும் நச்சுப்பொ ருள் சேர்க்கப்படுகின்றனவா ?**

தாராளமாகச் சேர்க்கப்படுகின்றன. காஞ்சூரங்காய் போன்ற விஷவிதைகள் அநேக மருந்துக்களுக்கு உபயோகப் படுகின்றன. பாம்பின் பித்து, சில விஷ செந்துக்களின் பித்துக்கள் மருந்துக்கு உபயோகப் படுகின்றன. இவை சில லேகியங்களுக்குக் கஞ்சா, அபின் போன்ற வஸ்துப் பொருட்களைச் சேர்த்துப் பெறும் நன்மையிலும் பார்க்க, அதிக விறுவிறுப்போடு நரம்புகளுக்கு மருந்தைச் சேர்த்து நோய்களைக் கண்டிக்கின்றன. இவற்ருல் ஒருவித கெடுதலும் மனிதர்க்கு ஏற்படுவதில்லை விஷத்திற்குவிஷம் என்பது போல விஷநோய்களை நேரடியாகக் கண்டித்துவிடுகின்றன.

**நரம்பு மண்டலத்தின் முடிச்சான சிரசிற்கு, மருந்து நெய்களைப் பூசுவதன் மூலம் வாதம் முதலிய நரம்பு சம்பந்தமான நோய்களை மாற்ற முடியாதா?**

நோய்க்கு, வேறு உள்மருந்துகள் சாப்பிடாமல் தனித்து மருத்தெண்ணெய் மூலம் மாற்றலாம் என்றுதானே கேட்கிறீர்கள்? தந்திக்கம்பிகள் இருக்கின்றன, அவையெல்லாம் ஒன்று கூடும் தலைமைத்தானமும் இருக்கிறது. இடையில் ஒரு தூண் முறிந்து கம்பி பழுதானதாக வைத்துக்கொள்வோம். அந்த இடத்தில் வந்து பழுதைத் தீர்க்காமல் தலைமைத்தானத்தில் எது வகையான திருத்தம் செய்தும் பலன் காணுத தன்மை போல உடம்பில் நோய் வாய்ப்பட்ட பாகங்களுக்கு மருந்தைச் செய்வதனுல் நோய் தீருமே ஒழிய தனித்து நோய்க்கேற்ற எண்ணெய் வகையைச் சிரசில் பூசிக் கொள்வதால் நீங்க மாட்டா. தொண்டைக்கு மேலே சிரசு வரையுமுள்ள ரோகங்களை எண்ணெய் வகையால் மாற்றலாம்.

**பீனிசம் என்ற வியாதி எப்படி ஏற்படுகிறது? இதற்கும் தொய்வுக்கும் சம்பந்தமுண்டா?**

பீனிசம் உஷ்ண சம்பந்தமாய் ஏற்படும் ரோகம். இந்நோய் உள்ளவர்களுக்கு ஆரம்பத்தில் தும்மலும் கழுத்தையும் தலையையும் சுற்றி அடிக்கடி வியர்வையும் ஏற்படும். சிலருக்கு மூக்கால் தும்மும் போது இரத்தமும் வடியும். இது இரத்த

பீனிசம் சிலருக்குத் தும்மலுடன் மஞ்சள் நிறமான சளிக்கட்டி 'குழுக்' என்ற சத்தத்துடன் வெளிவரும். இது பீனிசத்தைச் சார்ந்ததாகும். இந்நோயைக் கவனியாது விட்டால் காலகதியில் தொய்வு ஏற்படும்.

**ஈழை என்று தொய்வைச் சொல்லுகிறார்கள் எதற்காக?**

தொய்வு முற்றி வருடத்தின் பெரும்பகுதியும் சுவாச இழுப்பால் உபத்திரவப்படும் நோயை 'ஈழை' என்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. காலக்கிரமமாக இழுப்பு வருத்தத்தைக் கொடுப்பதைத் தொய்வென்றும், மழை, பனி, வெய்யில் காலங்கள் பூராகவும் சுவாசத்தைத் தாக்கும் இழுவை நோயை ஈழையென்றும் சொல்வார்கள்

**தொய்வு நோய் உள்ளவர்களுக்குக் கசமும் வருமா?**

வரும்; வராமலுமிருக்கும். நோயாளியின் சுவாசாசயங்களின் பலத்தைப் பொறுத்து இருக்கும். சுவாசப்பை பலவீனமானவர்களுக்குத் தொய்விலிருந்து கசம் ஏற்படும். அது சமயம் இருநோய்களேயும் நோயாளி அநுபவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**தொய்வு, கசம், சலரோகம் இத்தகையவியாதியஸ்தர்களுக்கு சிற்றின்ப உணர்ச்சி அதிகம் என்று சொல்லுகிறார்கள், அது உண்மையா?**

இந்த நோய்கள் மேகசம்பந்தமாய் உஷ்ண அதிகரிப்பால் ஏற்படுவதன் காரணமாக நோயுடையவர்களே தாது உஷ்ண மிகுதியால் நரம்புகளேக் கிளர்ச்சிப்படுத்தும். இந் நோயாளர்கள் விரக நோயாலும் வேதனைப்படுதல் சகசந்தான்.

**காச நீர், காசநோய் இவற்றிற்கும் கசநோய்க்கும் ஏதும் சம்பந்தமுண்டா?**

காசநீர் சம்பந்தமாகக் காசநோய் ஏற்படும். இந்தக்காசநோய்க்கும் கசநோய்க்கும் ஒருவித சம்பந்தமுமில்லே. காசநீர் சம்பந்தமாக மண்டைப் பீனிசம், தொய்வு என்பன ஏற்படும்.

**நோய் வந்தவர்களுக்குப் பத்திய பதார்த்தமாக மாமிசமா தாவரமா ஏற்றது?**

தாவர உணவுதான் நல்லது. மாமிச உணவு, கொழுப்புப்பதார்த்தம் அதிகமாய் இருப்பதால் நோயாளர் குடலில் சீரணிப்பது இலகுவாய் இராது.

**காத்தோட்டிக் காயை ஆடி அமாவாசை விரதநாளில் கறி பதார்த்தத்துடன் சேர்ப்பதன் நோக்கமென்ன ?**

காத்தோட்டிக்காய் (காத்து+ ஒட்டி) வாய்வைக் கண்டிப்பது விரதமாக இருந்து குடல் வெறுமையானவர்களுக்கு வாய்வு தொல்லைப் படுத்தும், அதனைப் பரிகரிப்பதற்காகக் காத்தோட்டிக்காய் சேர்க்கப்படுகிறது. ஆடியில் காத்தோட்டிககாய் கிடைக்குமாதலால் ஆடி அமாவாசை விரதத்திற்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள், ஏனைய விரதகாலங்களுக்கும் வற்றலாக்கி வைத்து உபயோகிப்பதால் வாய்வு சம்பந்தமான நோய்கள் நீங்கும். இந்தச் சமயத்தில் ஒன்று சொல்ல வேண்டும். இந்த விரதானுட்டானங்கள் மத சம்பந்தமாய் ஏற்பட்டாலும் சுகாதார வசதிக்குத்தான் பழைய கால மக்கள் அநுட்டித்து வந்தனர். விரதத்தால் இரத்தக் கொதிப்பு வியாதி வாரமல் தடுக்கலாம். வேறு நோய்களுக்கும் சாத்தியமாகும். கந்தசஷ்டி விரதம் கார்கால மாற்றத்தில் எதிர்ப்படும் விரதம். இவ்விரத அநுஷ்டிப்பால்மாரிகாலமுடிவில் மக்களுக்கு வரக்கூடியதான வியாதிகள் நீங்கும்.

**" வைத்தியம் பிழைத்தால் வாணத்தைப் பார் " என்று ஒரு நாடோடிப் பழமொழி வழங்கப்பட்டு வருகிறது, அதன் பொருள் என்ன ?**

வாணம் செய்யும் முறைகள் வைத்தியஏட்டில் ஒருபகுதியாக சொல்லப்பட்டிருக்கிறது, அதில் வாணத்தைச் செய்யும் முறைகளைச் சொல்லியபடி செய்தால் அந்த வாணம் எரியும் போது உண்மை நிரூபிக்கப்பட்டுவிடும். அதுபோலவே அதே ஏட்டில் விவரிக்கப்பட்டவைத்தியமுறையும் சொல்லப்பட்ட பலனைத் தவறாமல் கொடுத்துத்தீரும் என்பது தான் இந்தப் பழமொழியின் கருத்து,

**'மருத்தீடு' என்று ஒருசெயல் சிலருக்கிடையில் நடந்து வருவதாகச் சொல்கிறார்கள். இதில் உண்மை ஏதும் உண்டா?**

நான் அறிந்தவரையில் உளத் தத்துவத்தை ஒட்டிய ஒரு உண்மையைத்தான் சொல்லமுடியும்.

முதலில் மருத்தீடு என்பது என்ன என்று சொல்கிறேன். மக்களுக்குள்ளே பொறாமை.

பகையென்ற காரணங்களால் சிலருக்குச் சிலரால் செய்யப்படும் செயலைத்தான் மருத்தீடு என்று சொல்கிறார்கள், மருந்து இடுதல், அதாவது நச்சுத்தன்மையதானதும் உடனே கொல்லாததுமான பொருட்களை உணவிலோ பானத்திலோ இட்டுக் கொடுப்பது. கொடுக்கப்பட்ட விஷப்பொருள் குடலில் சென்று மலபந்தத்தை ஏற்படுத்திக் குடல் உறுப்புக்களைத் தாக்கக் கூடியதா யிருக்கும். கட்டுப்பட்ட மலத்தின் ஒரு பகுதி நெடுங்காலமாகத் தங்கி மருந்து பிரயோகிக்கப்பட்டவரை வருத்தும். அம்மலபந்தம் கெட்டியாகக் குடரை இறுக்கிக்கொள்ளும்.

இந்த விஷயம் எதுவுமில்லாமலே சிலர் தங்களுக்கு மருத்தீடு மருத்தீடு என்று சொல்லி மனசம்பந்தமாக நோயை வருவித்துக் கொள்கிறார்கள். இந்நோயை அகற்றுவதாகச் சொல்லிச் சிலர் வைத்தியஞ் செய்து மருத்தீட்டுக் கட்டியை விழுத்துவதுபோன்று தாம் கொடுத்த பேதி மருந்தின் ஒரு பகுதியை மருத்தீட்டுக் கட்டியைப்போல விழச் செய்து விடுகிறார்கள், மனம் சம்பந்தமாக வருத்தப்பட்டவர்களுக்கு இவ் வேலை பலனைக் கொடுக்கும்.

உண்மையாகவே மருத்தீட்டு விஷத்தால் (கர விஷம்) வேதனைப்படுபவர்களுக்கு மலக்கட்டியுடன் சம்பந்தப்பட்ட விஷத்துண்டை வெளிப்படுத்துவது சுலபமான காரியம் அல்ல. இந்த விஷத்தன்மை சிலருக்கு நரம்புடன் சேர்ந்து மூளைக் கோளாறுகளையும் வருவிக்கும். சிலர் தாம் விரும்பிய ஆடவர் பெண்டிருக்கு வசிய மருந்து இடுவதாக அறிகிறோம். மருந்திற்கு வசியம் ஏற்படுத்தும் சக்தியில்லை. நரம்புகளை, செலுத்திய மருந்தின் வேகம் துரிதப்படுத்துவதால் நினைத்த காரியங்கள் கைகூடுதலும் உண்டு.

**பாம்பு கடித்த ஒருவருக்கு முதலில் செய்யக்கூடிய தகுந்த சிகிச்சை என்ன?**

கடிவாயின் மேலாக இறுக்கமான கட்டுப்போடுதல், அதற்கு மேலும் கட்ட வசதியான இடத்தில் கட்டுதல் நல்லது. கடிவாயை சிறு கத்தியின் அலகால் கீறி விஷம் கலந்த இரத்தத்தை வெளிப் போக்கல் வேண்டும். அதற்குமேல் சிறு பிள்ளையின் சிறுநீரைப் பெய்வித்துப் பருக்குதல்வேண்டும். அதன்பின் விஷ வைத்தியரைக் கொண்டு வைத்தியஞ் செய்தல்வேண்டும்.

**சிறு பிள்ளைகளது சிறுநீர் என்ன வகையில் விஷத்தைப் பரவாது தடுக்கிறது?**

சிறுநீரில் நரம்புகளுடன் சேரும் விறுவிறுப்புக் குணமுண்டு. வயது முதிர்ந்தோர் சலத்தில் சலரோகம் போன்ற நோய்த் தன்மைகள் இருக்கக்கூடும். ஆதலால் அதனைப் பருக்கியவருக்கும் ஏற்படக்கூடுப. இக்காலத்திய சிறுவருக்குக்கூட சல வியாதியிருப்பதால் சிறு நீருககுல் பதிலாக பண்ணெய் பருக்குதல் நல்லது. ஒரு அவுன்ஸ் எண்ணெய்யை உடனே பருக்கிவிடின் (மண்ணெய்யிலும் விஷத்தை ஆவியாக்கி விஷவேகத்தை தடுக்கும் சக்தியுண்டு.) விஷத்தின் வலு நீங்கிவிடும். விஷ வைத்தியர்மூலம் திரும்ப வைத்தியம் செய்வித்துக் கொள்ளலாம்.

**நீங்கள் வைத்தியத்திற்குரிய பணத்தை வரையறுத்து ஏன் வாங்குவதில்லை.**

யார் யாரிடம் எவ்வளவுவாங்கலாம் என்பதை அறியமுடியாததால்.

**உங்கள் வைத்திய அனுபவத்தில் மறக்கமுடியாத சில சம்பவங்கள் இருந்தால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.**

இன்னொருதடவை சந்தர்ப்பம் நேருமானால் சொல்லி வைக்கிறேன்.

---


# தீபாவலி வருகிறது!

பல விதமான பட்டு, பருத்திநூல் புடவைகள்

**விலை மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்**

**ஒரு முறை விஜயஞ்செய்தால் உண்மை விளங்கும்,**

**B. J. அலோஷியஸ்,**

நிர். 32 34, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

தொடர் கதை

# இதய வானிலே......

## 4. ஒட்டும் இரு உள்ளங்களை...

**"உதயணன்"**

மழை கொட்டியது. புயல் அடித்தது. மின்னல் வெடித்தது, யாவும் ஓய்ந்தபின் சத்திர சிகிச்சை செய்துவிட்டு வெள்ளைத் துகிலால் மூடிவிட்டதுபோல முகிலை இழுத்துப் போர்த்துக்கொண்டு காட்சி யளிக்குமே வானம், அப்படி இருந்தது சந்திரனின் உள்ளம்,

அவன் மீனுவுக்கு எழுதிய கடிதத்தை அதிபர் பிரித்துப் படித்தது; அதனால் ஆசிரிய கலாசாலையில் இருந்து உடனடியாக நீக்கம் செய்தது; வீட்டுக்கு வந்ததும் தகப்பனர் நடேசபிள்ளையின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளானது இவை யாவும் அவனுடைய இதய வானில் மின்னி மறைந்தன.

"இன்னும் இரண்டே மாதத்தில் எங்கோ ஒரு பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்துவிடலாம், முயற்சி பண்ணி மீனுவையும் அதே பாடசாலையில் சேர்த்துவிட்டால்,.......பிறகு....... பிறகு" என்று எண்ணியிருந்த கற்பனைக் கோட்டை தூளாகிப் பறந்தது, ஆசிரியன் என்ற கட்டையில் உடலைச் சாய்த்துக்கொண்டு வாழ்க்கைக் கடலைக் கடந்துவிட எண்ணினன். ஒரு பேரலை அந்தக் கட்டையையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. இனி, நல்லவன், அப்பாவி, உலகம் தெரியாதவன் என்று எண்ணிக்கொண்டிருந்த வெளியுலகம் இவ்வளவையும் அறிந்தால் வேதனைக் கோலால் குத்திக்கிளறுதா? தொழில் இல்லை, போதிய பணம் இல்லை, நல்ல பெயர் இல்லை. மீனுமட்டும் எப்படி......? 'இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவன்வாயிற் சொல்.'

இன்னும் ஒரே ஒரு நம்பிக்கையுண்டு. இன்றுகாலை கல்லூரி அதிபரை காணச்சென்றநடேசபிள்ளை கொண்டு வரும் பதிலைப் பொறுத்தது அந்த நம்பிக்கையும்,

ஒரு பெருமூச்சு விட்டவண்ணம் நிமிர்ந்து உட்கார்ந்தான் சந்திரன். வெகு நேரத்துக்கு முன்பு தாயார் கொண்டுவந்து வைத்துவிட்டுப்போன காப்பி குளிர்ந்து ஆறிப்போயிருந்தது. ஒரு ஈ அந்த காப்பிப் பாத்திரத்தின் மேல் விளிம்பில் வந்திருந்து நகர்ந்தது. நகரும்போதே தற்செயலாகத் தவறி உள்ளே விழுந்துவிட்டதால் சிறகடித்துத் துள்ளியது. நீந்தத் தெரியாதவன் நடுச் சமுத்திரத்தில் குப்புற விழுந்து விட்டதைப்போல, தனது ஆள்காட்டி விரலை அந்த ஈயின்மேல் வைத்து அமுக்கிவிடாமல் அவன் அந்தப் பாத்திரத்தையே கையில்

எடுத்து காப்பி முழுவதையும் வெளி யே கொட்டிவிட்டான். ஈ தப்பியது. சந்திரன் ?

ஃ

கல்லூரி அதிபருடைய அலுவலகத் தில் நுழைந்தார் நடேசபிள்ளை'

"வாருங்கள்!" என்று மரியாதை யோடு ஆசனமதந்த அதிபர் 'என்ன விஷயம்" என்ருர்.

"கடந்தவாரம் கல்லூரியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டானே அவனுடைய தகப்பனுர் நான்

"ஓகோ! சந்திரன் விஷயமா? அவனே மீண்டும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்க வந்திருக்கிறீர்களாக்கும்!"

"ஆமாம்."

அதிபர் "கலாசாலைப் பிரமாணங் கள்" என்ற சிறிய புத்தகத்தை அலட் சியமாக மேசைமீது எடுத்துப் போட் டார். அட்டையைத் திறந்து முற் பக் கத்தில் ஒரு வரியைப் பென்சிலால் கோடிட்டு நடேசபிள்ளையிடம் கொடு த்தார்.

ஒழுங்குகளை மீறல் முறையீன மான நடத்தை காரணமாக மாணவர் எச் சந்தர்ப்பத்திலாவது கலாசாலையி னின்றும் நீக்கப்படுவர்" என்ற வாக் கியம் நடேசபிள்ளையின் கண்களை உறுத்திற்று.

"அவன் செய்தது தவறே தவறு தான். இவ்வளவு முயற்சிக்குப் பிறகு இந்தக் கடைசி நேரத்தில் 'போட்டடி த்துவிட்டால் அவனுடைய வருங் காலம்,......

"நீங்கள் சொல்வது சரிதான். அந்த வருங்காலத்தை ஏன் அவன் சிந்திக்க வில்லை? இப்படிப்பட்டவனுக்கு ஆசிரி யத தொழில் வேண்டாம். வேறொரு துறையில் பிரவேசிக்கட்டுமே"

"ஒரு வருடமும் பத்துமாதமும் கஷ் டப்பட்டுப் படித்துவிட்டான். நானும் ஏராளமாகச் செலவு செய்துவிட் டேன. இனி வேறொருதொழில் தேடு வதென்பது சொல்வதைப்போல அத் தனை சுலபமல்ல."

"அதற்கு நான என்ன செய்வது? அவனை மீண்டும சேர்த்துக்கொள்ள முடியாது,

நடேசபிள்ளைக்கு என்ன செய்வ தென்றே தெரியவல்லை, இப்பொழுது சந்திரனமட்டும அவருடைய முனனி லையில் நினறிருந்தால, மென்னியைப் பிடிதது நெரிததிருப்பாரோ, என் னமோ ?

"சரி, போய்வாருங்களேன்!" என்று சொல்லிய அதிபர் திரும்பி மேசையில் விரிததபடி கிடந்த புத்தகத்தில் கவன த்தைப் புதைததார்.

நடேசபிள்ளை எழுந்துசெல்ல ஆய த்தமாக அரைகுறையாக நாற்காலி யில் அமர்ந்தவண்ணம் தமது கடைசி அஸ்திரத்தையும் தொடுததார்.

"சந்திரன் கலாசாலையில் ஒருங்கீன மாக நடந்துகொண்டது தவருக இரு க்கலாம். ஆனல் பொதுவில் பிழை காண்பது பொருந்தாது ......

"ஏன்?" என்று கண்ணுடிக்குமேல் இமைக்குக்கீழ் இருந்த இடைவெளி யூடாகப் பார்வையைச் செலுத்தினர்.

அதிபர்.

"மீனு, அவனுடைய முறைப்பெண்" என்று துணிந்து ஒரு பொய்யைத் தூக்கி எறிந்தார்.

"அப்படியா? என்றாலும் அந்த உறவு முறைகளெல்லாம் இங்குவைத்துக்கொள்ளக் கூடாது. பயிற்சிக்கு வந்துவிட்டால் விவாக சம்பந்தமான ஏற்பாடுகள் செய்வதே கலாசாலை விதிகளுக்கு மாறானவை. பருவமடைந்த பெண்களை யெல்லாம் பெற்றோர் எங்களை நம்பித்தான் இங்கு அனுப்பி வைக்கிறார்கள். இப்படியாக நடந்த பின்னரும் நாங்கள் சிரித்துச் சமாளித்தால் நாளைக்குப் பெற்றோருக்கு எப்படி எங்களில் நம்பிக்கை வரும்... ஆமாம். ஒன்று செய்யுங்களேன்."

"என்ன?" என்றார் ஆவலோடு.

"எல்லா மாணவர்களது முன்னிலையிலும் சந்திரன் மீனுவிடம் மன்னிப்புக் கோரினால் மீண்டும் சேர்த்துக் கொள்ளலாம் என்றார் அதிபர்

"சரி, அப்படியே செய்யலாம்"

"இன்னும் இரண்டே மாதங்கள்—ஒழுங்காக நடந்துகொள்ளட்டும். நல்ல புத்தியைச் சொல்லி நாளைக்கு அனுப்பிவையுங்கள்"

"ஆகட்டும்—வருகிறேன்" என்று ஒரு கூழைக் கும்பிடு போட்டுவிட்டு துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடந்தார் நடேசபிள்ளை.

**ம**றுநாள் .........

கலாசாலை மண்டபத்தில் மாணவர் எல்லோரும் குழுமியிருந்தனர், முதன் முதலாக மேடையில் ஏறி ஆயிரக் கணக்கான மக்களுக்குச் சொற்பொழிவாற்ற இருக்கும் உள்ளத்தில் பயமில்லாத ஒருவனைப்போல சந்திரன் ஒருபக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். இன்னும் ஒரு ஐந்துநிமிட நேரத்தில் அதிபர் மேடையில் ஏறி மீனுவை அழைப்பார் மீனு மேடையில் சென்று நிற்கவேண்டும். அவளிடம் சென்று "நான் தவறுதலாகச் செய்த குற்றத்தை மன்னித்துக்கொள்ளுங்கள். இனிமேல் யாரிடமும் எக்காரணத்தையிட்டும் முன் யோசனையின்றி நடந்துகொள்ள மாட்டேன்" என்று சந்திரன் கேட்கவேண்டும். சந்திரன் கைக்குட்டையை எடுத்துக் குளமாகக் கொட்டிய வியர்வையைத் துடைத்துக்கொண்டான். "ஏன் என்னுடைய மீனுவிடம்தானே கேட்கப் போகிறேன். இதில் அவமானம் என்ன' என்று எண்ணிப்பார்க்க அவனால் முடியவில்லை. அந்தக் கண நேரத்தில் உரிமையுணர்ச்சி உறங்கி விட்டதுபோலும். என்ன இருந்தாலும் சந்திரன் ஒரு எழுத்தாளன். நடவாத சம்பவங்களை யெல்லாம் நடப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு மூளையைக் குழப்பிக்கொள்பவன். அப்படிச் சிந்தித்துச் சிந்தித்துப் பழகிப் போனவன். தன் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு அசைவையும் அவதானத்தோடு கவனிப்பவன். சிறிய நிகழ்ச்சிகளையெல்லாம் பூதக் கண்ணாடி வைத்துப் பார்ப்பான். கல்லூரியில் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் வீட்டில் பெற்றோராலும் மற்றோராலும் துளைத்தெடுக்கப்பட்டு சோர்ந்து களைப்படைந்து போயிருந்த அவன் அடுத்து

நடக்க இருக்கும் நிகழ்ச்சியை கற்பனை பண்ணிப் பார்த்தான். அவனுடைய உடல் பலமாக நடுங்கியது.

எந்த மனிதனும் தானுகவே கவலையை விலைக்கு வாங்கிவிடத் தயாராக இல்லை. ஆனல் பிறர் துயரப்படும் பொழுது சிலர் அவர்களுடைய துயரத்தில் தாமும் பங்குகொண்டு ஆறுதல் சொல்வார்கள். சிலர் யார் வாழ்ந்தாலென்ன, யார் தாழ்ந்தாலென்ன என்று எண்ணிப் பேசாதிருப்பார்கள். இன்னும் சிலரோ துன்பப்படுவோரின் உள்ளத்தைக் குத்திக் கிளறி வேதனையைப் பன்மடங்காக்கும் நற்பணிபுரிவார்கள், இப்படிப்பட்ட பல தர உள்ளம் படைத்தவர்கள் சந்திரனின் மாணவ நண்பர்களிலும் இல்லாமலில்லை, நேரம் நெருங்கியபொழுது சிலர் சௌரவமாக எழுந்து வெளியே சென்றனர். சிலர் சந்திரனுக்குத் தைரியம் கூறினர், சிலர் கேலிப் பாணங்களைத் தொடுத்தனர்.

ஆரம்பமாயிற்று.

மேடையில் அதிபர் நின்றுகொண்டிருக்கிறர். அவர் அருகில் மீனு நிற்கிறள். பதுமையாட்டம் ஊதா வர்ணக் கோடுகளமைந்த மஞ்சள் சட்டையும் கத்தரிப்பூ வர்ணக் கம்பளத்தில் முத்துப் பதித்தாற்போல வெள்ளைப் புள்ளியிட்ட பட்டுச் சேலையும் அணிந்திருந்த அவளது நிலை—கைதேர்ந்த சைத்திரிகன் பல வர்ணக் கலவைகளைச் சேர்த்துத் தீட்டிய சோகச் சித்திரத்தை நினைவூட்டியது.

சந்திரன் மேடையில் ஏறினன். நடந்தான். மீனு அருகில் சென்று விட்டான். ஒரு நிமிடம் வீணே கரைந்து ஒழிந்தது. அடுத்த நிமிடம் சந்திரன் வாய்திறந்து பேசினன்.

'நான் தவறுதலாகச் செய்த குற்றத்தை மன்னித்துக்கொள்—ளுங்கள்...' என்றவாறு நிமிர்ந்து மீனுவை நோக்கினன். அவளுடைய மலர் விழிகளில் கீழே குதிக்கத் தயாராக இருந்த இரு கண்ணீர் மணிகள் அவனை என்ன பாடுபடுத்தினவோ, சொல்ல வந்த வாக்கியத்தை முடிக்கவில்லை, 'தடால்' என்று கீழே சாய்ந்தான்.

"சந்திரன்!" என்று கூவிக்கொண்டு மீனு அருகில் உட்கார்ந்து விட்டாள். மடை திறந்தது. மாணவர் பரிவாரம் திரண்டு குழுமிற்று.

இளம் உள்ளங்களிடையே ஏற்படும் பரஸ்பரம் அன்பை எவராலும் எந்தச் சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாது, மலை முடியில் ஊற்றெடுத்துப் பாயும் அருவியை எப்படி மண்போட்டு மறித்துக்கட்ட முடியாதோ அப்படி! அந்தத் தூய அன்புக்கு எவ்வளவு எதிர்ப்புகள் தோன்றுகிறதோ, அதைப் போன்ற பன்மடங்கு வேகத்தில் வளரும் அந்த அன்பு, அணை போடப்பட்ட நீரூற்று மீறிட்டுப் பாய்வதைப் போல இந்தக் களங்கமற்ற அன்பும் சந்தர்ப்பத்தைப் பாராது, சுற்றுடலைக் கவனியாது குமுறிக் கொப்புளிக்கும். இப்படியான சோதனைக்குள்ளான ஒரு உள்ளம் வெந்து உணர்விழந்து கிடந்தது. இன்னெரு உள்ளம் துடித்துப் புரண்டது.

ஆனல்......

சந்திரன் மூர்ச்சையடைந்த அதே நேரத்தில் மீனுவுடைய வீட்டில் இன்னெரு சோக சம்பவம் நடந்துகொண்டிருந்தது.

சந்திரனைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு அவனுடைய விஷயமாக தமையனர் நாராயணனுடன் யோசித்துப் பார்த்தார் நடேசபிள்ளை. சந்திரனும் மீனுவும் ஏகமனதாக ஒருவரை ஒருவர் விரும்புவதால் அவர்களைப் பிரிப்பது நியாயமில்லை என்ற முடிவுக்கு வந்தனர் இருவரும். எனவே இருவரும் மீனுவின் தந்தையைக் கண்டு பேசி ஒரு முடிவுக்கு வந்துவிடுவது என்ற எண்ணத்துடன் புறப்பட்டார்கள்,

"அடடா, வாருங்கள், வாருங்கள் இந்தப்பக்கமே நீங்கள் வந்துபோவது கிடையாதே" என்று சம்பிரதாயப்படி முகமன் கூறி வரவேற்ருர் மீனுவின் தந்தை.

பேச்சுத் தொடங்கியது. பேச்சு அரசியலில் தொடங்கி, சமூக வாழ்க்கையில் குதித்து, புராண காலத்துக்குத் திரும்பி, கண்ணகி காலத்துக்குச் சென்று ஒரு கலக்குக் கலக்கி விட்டு மீனுவின் திருமண விஷயத்தில் வந்து நின்றது.

"இவருடைய மகன் சந்திரனை உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்" என்று கூறினுர் நாராயணன்.

"சந்திரன்.......இல்லையா ? ஆமாம், சிறுவனுக இருக்கும்பொழுது பார்த்ததுதானே. இப்பொழுது நன்ருக வளர்ந்திருப்பானே.

"அவனுடைய விஷயமாகத்தான் ஒரு நல்ல காரியமாகப் பேச வந்திருக்கிறேம்."

"அப்படியா? என்ன சங்கதி?"

"அவனுக்கும் வயது வந்துவிட்டது விவாகம் செய்துவைக்கவேண்டிய பருவம். உங்களுடைய மகள் மீனுவை ........"

"சந்திரனுக்கு மணம் செய்துவைக்க வேண்டுமென்கிறீர்கள். ஆகா, நான் பெரிய பாக்கியசாலிதான் போங்கள். எங்களுடைய உறவு இன்னும் பல மடையப்போகிறது என்று சொல்லுங்கள்." என்று சொல்லி உவகை பொங்கச் சிரித்தார் மீனுவின் தந்தை.

'அப்பாடா' என்று ஒரு மூச்சு விட்டபடி காலியாக்கப்பட்ட காப்பிப் பாத்திரங்களை மேசையில் வைத்தனர் அண்ணனும் தம்பியும்.

"ஆமாம், சந்திரன் என்னதொழில் பார்க்கிருன்?" மீனுவின் தந்தை கேட்டார்.

"மீனுவோடு இப்பொழுது தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருக்கிருன். இன்னும் இரண்டு மாதங்களில் வெளியேறிவிடுவான்.

"பூ, போயும் போயும் தமிழ் வாத்தியார்தானு?" உதட்டைப் பிதுக்கினுர் மீனுவின் தந்தை.

ஆச்சரியத்தோடு அவரை நோக்கினுர் நாராயணன்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். இந்தச் சம்பந்தம் நமக்குச் சரிப்பட்டு வராது. போய்வாருங்கள்" என்று கைகூப்பி விடை தந்தார்,

ஏமாற்றத்தோடு எழுந்து நடந்தார் நடேசபிள்ளை. தொடர்ந்து சென்ருர் நாராயணன். (வளரும்)

# நாவலர் கட்டுரைப் போட்டி

**முதற்பரிசு : ரூபா 12-00**

**இரண்டாம் பரிசு : ரூபா 8.    மூன்ரும் பரிசு : ரூபா 5.**

ஆறுமுக நாவலர் தமிழ் மொழிக்குச் செய்த சேவையை என்றென்றும் நாம் நன்றியுடன் நினைவு கூர்தல் வேண்டும். மாணவர்களிடையே அப்பெரியாரின் நினைவை நின்று நிலைக்கச் செய்யும் நோக்கத்துடன் இக்கட்டுரைப் போட்டியை நடாத்துகின்ரேம்.

**நிபந்தனைகள்**

1. கட்டுரைக்குரிய தலைப்பு. "நாவலரும் தமிழும்"
2. 20 வயதுக்குடபட்ட மாணவ, மாணவிகள் மட்டும் பங்குபற்றலாம்.
3. கட்டுரை 'கலைச்செல்வி'யின் மூன்று பக்கங்களுக்குக் குறையாமலும் ஐந்து பக்கங்களுக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும்.
4. கட்டுரைகள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி: 30-11-58.
5. கட்டுரைகளில், பங்கு பற்றுவோரின் பெயர் எழுதப்படக்கூடாது. கீழேயுள்ள பத்திரம் நிரப்பி அனுப்பப்படவேண்டும்.

**நாவலர் கட்டுரைப் போட்டி**

பெயர்........................................................

முகவரி........................................................

வயது...................    பிறந்ததிகதி...................

..............................    ..............................

ஆசிரியர் கையொப்பம்    கையொப்பம்

பொன்னியிலே! திளைத்தெழுந்த அன்புச் செல்வீர்!

புகழெனிலே உயிர்நல்கும் வழியில் வந்தீர்.

என விளித்துச் சாத்தன் கூறும் வீர உரைப் பாடல்கள் ஐந்தும் பாரதிதாச னின் பாடல்களை நினைவூட்டினாலும் ஆசிரியரின் கவிதை வளத்தையும் எடுத் துக்காட்டுகின்றன. "புலியதற்குப் பாயசச்சலில்லை" என்ற பாடல் நம் நினைவை விட்டு என்றும் அகலாததொன்று. அப்படியே தாயின் சீற்றமும் ஏற்றமுறப் பாடப்பட்டிருக்கிறது. "செந்தழலைத் தேக்குமிரு விழிகளோடும்" என்றபாடல் யோகியாரின் கண்ணகியை நினைவுக்குக கொண்டு வந்து நிறுத்துகிறது. "உற்றபேராசைதூண்ட ஒருசிறு காதைசெய்த சொக்கனை வீரத்தாய் 'நகைக்க'வைக்கமாட்டாள். உண்மை. இந்நூலால் பெற்ற வெற்றி மகத்தானதாய் இல்லாவிடினும் "சோடை" போகவில்லை. கவிதையிலும் அவர் எதிர்காலம் பிரகாசிக்கக்கூடியதே என்பதற்குச் சூசகங்கள் அங்கங்கே இந் நூலிலும் புதைந்து கிடக்கின்றன. ஆனால் கவிதை நூல்களைக் கவர்ச்சியாய் வெளியிடு வதிலும், பிழைகளின்றி வெளியிடுவதிலும் கவனம் செலுத்தவேண்டும்;

—கனக. செந்திநாதன்.

## உதிர்ந்த ரோஜா (*சிறு நாடகம்*)

*ஆசிரியர்:* H. R. சென்னகிருட்ணன், *பிரசுரம்:* நிலாவொளி பதிப்பகம்

*அரிசிப்பாளையம், சேலம்.* விலை 2 அணா.

ஓவியர் மணிமாறனுக்கும் இளவரசி இன்பவல்லிக்கும் இடையே காதல் ஏற்படுவதையும், 'வழமைபோல்' பரிதாபமாக முடிவதையும் காட்டுகின்றது நாடகம். புளித்துப்போன கரு. வசனம் பரவாயில்லை. பொழுதை நகர்த்தப் படிக்கலாம். பொறுமை இருந்தால் நடிக்கலாம்.

**புதுமை இலக்கியம்,** இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்க வெளியீடு

**71, காஸில் வீதி, கொழும்பு 8.**

எழுத்தாளர்களிடையே நல்லுறவு, எழுத்தாளர்களின் முன்னேற்றம்— ஆகிய நோக்கங்களுடன் இ. மு. எ. சங்கத்தாரால் இரண்டு ஆண்டுகட்கு முன் வெளியிடப்பட்ட 'புதுமை இலக்கியம்' இடையில் மறைந்துவிட்டு இப் போது மறுபடியும் வெளிவரத் தொடங்கியுள்ளது. 'இந்தியப் பத்திரிகைக ளும், இலங்கை எழுத்தாளர்களும்' என்பதில் பொதுச் செயலாளர் பிரேம்ஜி கூறிய கருத்துக்களை அனைவரும் சிந்திக்க வேண்டும். விமர்சனங்களுக்கு அதிக இடம் கொடுப்பது நல்லது. பத்திரிகை இடைவிடாது வெளி வருவ தற்கு எழுத்தாளர்கள் அனைவரும் உதவி செய்வார்களென எதிர்பார்க்கின் றோம்.

—*சரா.*

# அறிவரங்கம்

## மாணவர் ஆற்றல் போட்டி எண் 3.

## விடைகள்.

1. பாரதியார் - தனியொருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்.
2. நாவற்குழியூர் நடராஜன்
3. எல். இராஜேந்திரன்
4. ரூல்ப் பிச்
5. கலையரசு சொர்ணலிங்கம்
6. அடிப்பாரற்று
7. லெமூரியா
8. பாரதிதாசன்
9. ரெஞ்ஜன்
10. ஜி. சோபேர்ஸ்

**முதலாம்பரிசு**

மு. இராசரத்தினம்
மே/பா. திருமதி. ப. முத்தையா
" செந்தில் "
அளவெட்டி.

**இரண்டாம் பரிசு**

மு. சிவசுந்தரம்
'மல்லி ஓடை'
வல்வெட்டி.
வல்வெட்டித்துறை.

**மூன்றும் பரிசு**

க. சரநாதன்
7-ம் வகுப்பு
இந்துக்கல்லூரி
மானிப்பாய்.

பரிசு வழங்கிய அன்பர்கள்:

1. திரு மு. பரமேஸ்வரன் B. A. கல்வியங்காடு
2. „ த. அருணகிரிநாதன் கொழும்பு.
3. „ சோ. பரமசாமி, பச்சையப்பன்கல்லூரி, காஞ்சீபுரம்.

உயர்ந்த ரகம் நிதான விலை



சகல விதமான பனாரிஸ், மணிப்புரி கூறைச்சேலை
களுக்கும் புடவைவகைகளுக்கும் நம்பிக்கையான இடம்.
பாரிஜாத ஊதுபத்திகள், கோவில் பட்டுக்குடைகள்,
சுத்தக் கதர் முதலியன கிடைக்கும்.

## ஆ அப்பையா அன் கோ,

பாட்னர்ஸ்: { ஆ. அப்பையா
{ செ. காசிப்பிள்ளை

82, காங்கேசன்துறை ரோட், யாழ்ப்பாணம்.

Estd. 1928 Tele: ROHINI

# S. R. S.
## ஜவுளிக் கடை

மணிப்புரி சேலை, நயிலோன் பிறின்ற் சேலை மற்றும் உயர்ந்த
ரக துணிகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம்.
**மொத்த வியாபாரிகளுக்கும் சங்கக்கடைகளுக்கும்
தகுந்த கமிஷன் உண்டு.**

## எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை ரோட், யாழ்ப்பாணம்.

## மாணவர் ஆற்றல் போட்டி எண் 4.

கல்லூரிகள் பாடசாலைகளில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் இதில பங்கு பற்றலாம். விடைகளை வெள்ளைத் தாளில், மையினுல் எழுதிக் கீழேயுள்ள முகவரியை வெட்டி ஒட்டி நவம்பர் 5ந்-திகதிக்கு முன் அனுப்புக. வழமைபோல் பரிசுகள் வழங்கப்படும்.

1. தமிழ் மறைக் கழகத் தலைவர் யார்?
2. டாஸ்கன்டில் இம்மாதம் நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மகா நாட்டிற்கு இலங்கையிலிருந்து சென்ற தமிழ் எழுத்தாளர் யார்?
3. வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் (N. P, T. A) தலைவரின் பெயர் என்ன?
4. தஞ்சை சரஸ்வதி மஹாலை எந்த அரசர் கட்டுவித்தார்.
5. 'கர்நாடகம்' என்ற புனை பெயரில் எழுதிய பிரபல எழுத்தாளரின் சொந்தப் பெயரென்ன?
6. திருட்டுக் குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கும் நாடு எது?
7. M. C. C. என்பது எதைக் குறிக்கின்றது.
8. மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா — என்றபாடலை இயற்யவர் யார்?
9. தென் ஆபிரிக்காவில் காந்தியடிகளால் மிகவும் பாராட்டப்பட்ட தமிழ்ப் பெண்ணின் பெயரென்ன?
10. யூரேனியத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

............ இங்கே வெட்டுக ............

ஜோதி வாத்தியார்
மே/பா கலைச்செல்வி
கந்தரோடை
சுன்னுகம்.

# கே. ஆர். லிங்கம்ஸ்

## மிளகாய்த்தூள், கோப்பித்தூள்

பாவிப்பாளர்கட்கு

## விசேஷ அறிவித்தல்.

இப்பொழுது மிகவும் முன்னேற்றமான முறையில் தயார் செய்கிறோம். உங்கள் குடும்பத்துக்கு ஒரு பத்துச்சதப் பைக்கற் திருப்தி என்பது உறுதி. சிக்கனமான முறையில் உங்கள் சாப்பாட்டை தயார் செய்ய எங்களுடைய தூள் வகைகளைப் பாவியுங்கள். எப்பொழுதும் திறமாயிருப்பது எங்களுடைய தூள்வகைகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

**கே. ஆர். லிங்கம் மில்ஸ்**

*சீராவியடி, யாழ்ப்பாணம்.*

**விநியோகஸ்தர்கள்:**

**மில்க் வைற் சோப் வோர்க்ஸ்**

527, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

# ஶ்ரீ பேமஸ் ஸ்டோர்ஸ்

நவநாகரிகத்திற்கு ஏற்ற பலதரப்பட்ட பாதரட்சைகள் எங்களிடம் எந்தச் சமயங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இவையுடன் ஆடம்பரப் பொருட்கள், கடிகாரங்கள், பெண்கள் கூந்தல் முடிகள் சிறுவர்கட்கு ஆனந்தமூட்டக்கூடிய விளையாட்டுப் பொருட்கள், பேனா வகைகள், பெட்ரோல் மேக்ஸ் லாம்பு, ஸ்டொவ், வெகுமதி அளிக்கக்கூடிய பொருட்கள், பெண்களின் தையல் வேலைப்பொருட்கள், சைக்கிள் உறுப்புகள் முதலியன விலை நிதானமாகவும், உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.

**வாடிக்கைக்காரரை ஆதரிப்பதும், திருப்திப் படுத்துவதும் எங்களின் முதல்நோக்கம்.**

ஶ்ரீ

# பேமஸ் ஸ்டோர்ஸ்,

நிம், 10, 17, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# லக்கி ஹவுஸ்

கலியாண வைபவம், புதுமனைப் பிரவேசத்திற்காகிய சிறந்த பரிசுப் பொருட்கள், ஸ்போட்ஸ் விளையாட்டு (கப்ஸ்)

**மற்றும் உபகரணங்கள்**

பிரயாணத்திற்காகிய ஸ்றீல் றங்கு, லெதர் & பைபர் சூட்கேஸ்வகைகள், ஆடர் பெண்டிர் கைக் கடிகாரங்கள், அழகிய வேலைப்பாடு அமைந்த சுவர்க் கடிகாரங்கள்

மற்றும் இதர பொருட்களுக்கும் சிறந்த இடம்

**லக்கி ஹவுஸ்**

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

## LUCKY HOUSE

88, & 90, K. K. S. Road, JAFFNA.

## நவலங்கா கஷ்ட நிவாரண சங்கம்

விபத்து, விவாகம், அந்தியகாலம், கல்வி

**உடனே சேர்ந்து உங்கள் சேம லாப உரிமையைப் பெறுங்கள்.**

**அங்கத்தவர்களுக்குக் கடனும் கொடுக்கப்படும்.**

விபரங்களுக்கு எழுதுக:

**82, ஹாஜியார் பில்டிங்**

(மேல்மாடி)

கஸ்தூரியார் வீதி. :: யாழ்ப்பாணம்.



தமிழ் இலக்கிய மன்றத்திற்காக திருநெல்வேலி சு: இராஜநாயகம் அவர்களால் யாழ்ப்பாணம் 213, கே. கே. எஸ் வீதியிலுள்ள ஸ்ரீ காந்தா அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.

நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன்

# புலவர் பரிசு 1958

## சிறந்த கவிதைக்கு ஒரு தங்கப்பதக்கம்.

ஈழ நாட்டின் மதிப்பிற்குரிய புலவராகிய
நவாலியூர் சோமசுந்தரப் புலவரவர்களின்
நினைவாக இக்கவிதைப்போட்டி நடாத்தப்படுகின்றது.

வெற்றி பெறும் கவிஞருக்கு

**தங்கப்பதக்கம் ஒன்று வழங்கப்படும்**

பிரபல எழுத்தாளரும் ஆனந்தா அச்சக நிர்வாகியுமாகிய

**திரு. ச. வரதராசன் அவர்கள்**

இப்பரிசை வழங்குவார்கள்.

### நிபந்தனைகள்.

1. போட்டியில் எவரும் பங்கு பற்றலாம்.
2. கவிதைக்குரிய தலைப்பு "புதிய உலகு"
3. கவிதை 60 வரிகளுக்குக் குறையாது, 120 வரிகளுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
4. கவிதைகள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31-10-58.
5. பரிசுக்குரிய கவிதையைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் கீழ்க்கண்ட ஐவரும் பணியாற்றுவார்கள்.

**1 பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை**
**2 புலவர்மணி A. பெரியதம்பிப்பிள்ளை**
**3 பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா**
**4 திரு. கனக. செந்திநாதன்**
**5 ஆசிரியர் கலைச்செல்வி**

6 "கலைச்செல்வி" நிர்வாகத்தில் பங்கு கொண்டவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

Registeretd the G. P. O. as a Newspapaer.

1-4




# செல்லம்ஸ்

கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ